# செஞ்சொற் கவிக்கோவை

தொகுத்தவர் :

பேராசிரியர், டாக்டர்

ரா. பி. சேதுப்பிள்ளை, பி. ஏ., பி. எல்.

UNIVERSITY EXTENSION LIBRARY
14 AUG 1960
MADURAI

பழனியப்பா பிரதர்ஸ்

சேப்பாக்கம்,
சென்னை -5.

: :

தெப்பக்குளம்,
திருச்சி – 2.

முதற் பதிப்பு :—2-9-'57

தென் மொழிகளின் புத்தக டிரஸ்டு ஆதரவில்
பதிப்பிக்கப் பெற்றது.

விலை ரூ. 1/-

ஏஷியன் பிரிண்டர்ஸ்,
சென்னை-5.

# நூன்முகம்

தென் மொழிகள் புத்தக டிரஸ்டின் முதல் வெளியீட்டைத் தென்னிந்திய மக்களுக்கு அளிக்கின்றோம். இந்த நிலையம் 'போர்டு' நிலையத்தாரின் வண்மையால் உருவாகி வளர்ந்தது. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய தென்மொழிகளில், அறிவும் கலையும் நிறைந்த நூல்களை மலிந்த விலைக்கு வெளியிடுவதை ஆதரிப்பது இதன் நோக்கமாகும். அதன்படி 'போர்டு' நிலையத்தாரும், தென்னிந்தியப் பல்கலைக் கழகத் துணை வேந்தர்களும் கூடி, இம்மொழிகளில் பல்வகைச் சிறந்த நூல்கள் வெளிவரல் வேண்டும் எனத் துணிந்து, இந்த ஸ்தாபனத்தை நிறுவினர். இந்நோக்குடன் ஒரு மூன்றாண்டுத் திட்டம் வகுக்கப்பட்டது. அத்திட்டத்தின் முதற்பயன் இவ்வெளியீடு. புலமை மிக்கவர்க்கே புலனாகும் அரிய நூல்கள் ஒதுக்கப்பட்டன. ஆங்கில அறிவு இன்றிப் படித்த பாமரனுக்கும் பயன்படுமாறு, எளிய நடையில் இன்பமும் பயனும் ஈயும் நூல்களைத் தேர்ந்தெடுத்தலே ஸ்தாபனத்தின் குறிக்கோள்.

இலக்கிய வளம் மல்கிய மூல நூல்களைப் பதிப்பித்தல்; கலை, விஞ்ஞானப் புத்தகங்களை வெளியிடல்; உலகின் பிற மொழி நூல்களை மொழிபெயர்த்தல் ஆகியவை நிறைவேற்ற இருக்கும் பணிகள்.

"மலிந்த விலையில் உயர்ந்த நூல்"—இதுவே தென்மொழி நூல் டிரஸ்டின் இலட்சியம். இம்முதல் வெளியீட்டால் அவர்கள் இந்த இலட்சியத்தை எய்தினரா என்பதை மக்கள்தான் கூறவேண்டும். இம் முயற்சியின் வெற்றியும், பெருமையும் பத்து ஆண்டுகளுக்குப் பின்னரே வெளிப்படும். இத்திட்டத்தின் சிறப்பு உண்மையை

நோக்குவார்க்கே புலனாகும். இத்திட்டத்தின் ஆற்றல் அளவிடற்கரிது. எங்கும் அகன்று பரவும் வாய்ப்புடன், குறைந்த விலையில் வெளிவரும் இந்நூற்கள், எளிதில் பட்டி தொட்டிகளிலுள்ள மக்கள் கரங்களிலும் தவழும்; இந் நாட்டின் முதுகெலும்பனைய சிற்றூர் மக்களின் வாழ்வில் இன்ப ஒளி ஏற்றும்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகட்கே இந்த ஸ்தாபனம் நிறுவப்பட்டுள்ளது. இதற்கும் காரணம் இல்லாமலில்லை. அவை தென் இந்திய மொழிகள். புராதன இந்தியாவில் 'தக்கணம்' என்பது பூமி நூலின்படி விந்தியத்திற்குத் தெற்குள்ள நிலப்பரப்பே யாகும். ஆனால் பண்பாட்டின்படி, அது, இந்த நான்கு மொழி பேசும் மக்களையும், அவர்தம் மொழியையுமே குறிக்கும். இம்மொழிகள் ஓரினத்தன என்பதில் ஐயமில்லை. 'திராவிடம்' என்ற அடைமொழியைச் சேர்க்கத் தயங்குகிறேன். ஏனெனில், அது 'மொழி', 'இனம்' என்ற பொருளில் கொள்ளப்படாமல், கருத்து வேற்றுமை, அரசியல் என்ற நோக்குடன் பயன் படுத்தப் படுகின்றது. இம்மொழிகளிடையே காணும் ஒருமைப்பாடு தவிர, அம்மக்களிடையிலும் ஒரு தன்மைத்தாய பண்பாடும் காணக் கிடக்கின்றது. இதுவே தக்கண தேசத்தை இந்தியாவினின்றும் தனியாகக் காட்டுகின்றது. கர்நாடக சங்கீதம் என்ற தனி மரபும் நிலவுகின்றது. இதுபோன்றே தென்னிந்திய சிற்பக் கலையும், கட்டடக் கலையும் தனிப் பெருமையுடையன. மக்களின் பழக்க வழக்கங்களும், விழாச் சிறப்புக்களும், தனிச் சிறப்புடன் நிலவுகின்றன. இத்தனிச் சிறப்புக்கள் இந்நூலகத்தாரின் வெளியீடுகளால் பரவும் என நம்புகிறேன். அதேபோது, பிரிவு மனப்பான்மையை அகற்ற, இந்தியப் பண்பாட்டை விளக்கும் நூல்களும், உலகப் பண்பாட்டைக் கூறும் புத்தகங்களின் மொழிபெயர்ப்புக்களும் வெளியிடப்படும்.

பி. வி. இராஜமன்னர்.

# முன்னுரை

செஞ்சொற் கவிக் கோவை என்னும் இத் தமிழ் நூல் ஓர் இன்கவித்திரட்டு. தமிழகத்தில் பழங் காலம் முதல் இருபதாம் நூற்றுண்டுவரை எழுந்த இனிய தமிழ்ப் பாடல்களில் சிலவற்றை இக் களஞ்சியத்திலே காணலாம்.

பழந்தொகை நூல்களாகிய எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும், நீதி நூல்களுள் தலை சிறந்த திருக் குறளும், இரட்டைக் காவியங்கள் என்று போற்றப் படும் சிலப்பதிகாரமும் மணிமேகலையும், தெய்வம் மணக்கும் நால்வர் நற்றமிழும், ஆழ்வார்கள் அருந் தமிழும், பாநலம் சான்ற பரணிப் பாட்டும், பள்ளி எழுச்சிப் பாட்டும், அணி நலம் திகழும் ஆற்றுப் பாட்டும், அம்மானைப் பாட்டும், பக்திச் சுவை சொட்டும் பெரிய புராணமும், கவி மணம் கமழும் கம்பராமாயணமும், ஆன்ரோர் பாடல்களும், அருட் பாவும், குறத்திப் பாட்டும், பாரதியார் பாட்டும், இந் நூலில் அமைந்து அழகு செய்கின்றன.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் முற்றுப் பெறுகின்ற இக் கவிக் கோவையை நற்றமிழுலகம் நன்கு கற்று இன்புறும் என்று நம்புகிறேன்.

ரா. பி. சேதுப்பிள்ளை

MADURAI

# உள்ளுறை


1. புறப்பொருள் ... 1
2. அகப்பொருள் ... 3
3. பத்துப்பாட்டு ... 5
4. நீதிப் பாட்டு ... 7
5. திருக்குறள் ... 10
6. சிலப்பதிகாரம் ... 18
7. மணிமேகலை ... 20
8. திருஞானசம்பந்தர் ... 22
9. திருநாவுக்கரசர் ... 24
10. சுந்தரமூர்த்தி ... 26
11. மாணிக்கவாசகர் ... 28
12. ஆழ்வார்கள் அருந்தமிழ் ... 30
13. பரணிப் பாட்டு ... 33
14. பள்ளியெழுச்சிப் பாட்டு ... 35
15. ஆற்றுப் பாட்டு ... 38
16. அம்மானைப் பாட்டு ... 40
17. திருத்தொண்டர் புராணம் ... 42
18. கம்பராமாயணம் ... 45
19 நள வெண்பா ... 55
20. வில்லி பாரதம் ... 57
21. அரிச்சந்திர புராணம் ... 59
22. பிள்ளைத் தமிழ்ப் பாட்டு ... 63
23. தாயுமானவர் பாடல் ... 66
24. திரு அருட்பா ... 68
25. குறத்திப் பாட்டு ... 71
26. தெய்வத் தமிழ்மாலை ... 75
27. தமிழகப் புகழ்மாலை ... 78
28. புரவலர் புகழ்மாலை ... 81
29. பாரதி பாடல் ... 84
30. தமிழ்த்தாய் வாழ்த்து ... 103

குறிப்பு ... 1

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# செஞ்சொற் கவிக்கோவை

## புறப்பொருள்

நெல்லும் உயிர் அன்றே; நீரும் உயிர் அன்றே ;
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் ;
அதனால்,
யான் உயிர் என்பது அறிகை
வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே.

—புறநானூறு.

உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே;
பிறப்போர் அன்ன உடன்வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும் ;
ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருக என்னாது, அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும் ;
வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்,
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே.

—புறநானூறு.

ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே ;
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே ;
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே ;
நல்நடை நல்கல் வேந்தற்குக் கடனே ;
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

—புறநானூறு—

ஒருதிசை ஒருவனை உள்ளி, நால்திசைப்
பலரும் வருவர் பரிசில் மாக்கள் ;
வரிசை அறிதலோ அரிதே; பெரிதும்
ஈதல் எளிதே; மாவண் தோன்றல் !
அது நற்கு அறிந்தனையாயின்,
பொதுநோக்கு ஒழிமதி புலவர் மாட்டே.

—புறநானூறு—

'யாண்டு பலவாக நரையில ஆகுதல்
யாங்கு ஆகியர்' என வினவுதிர் ஆயின்,
மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர் ;
யான் கண்டனையர் என் இளையரும் ; வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும்; அதன்தலை,
ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர் யான் வாழும் ஊரே.

—புறநானூறு—

## அகப்பொருள்

யாயும் ஞாயும் யார் ஆகியரோ !
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர் !
யானும் நீயும் எவ்வழி அறிதும் !
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே !

—குறுந்தொகை.

போர் என்ன வீங்கும் பொருப்பன்ன பொலங்கொள் திண்தோள்
மாரன் அனையான் மலர் கொய்திருந்தானை, வந்து ஓர்
கார்அன்ன கூந்தல் குயில் அன்னவள் கண் புதைப்ப
'ஆர் என்னலோடும் அனல் என்ன அயிர்த்து உயிர்த்தாள்.

— கம்பராமாயணம்.

கன்னல் எனும் சிறுகுருவி ககன மழைக்கு ஆற்றுமல்
மின்னல் எனும் புழு எடுத்து விளக்கேற்றும் கார்காலம்;
மன்னவனும் தென்மதுரை மாவலி வாணனைப் பிரிந்து இங்கு
என்ன பிழைப்பு, என்னஇருப்பு, என்ன நகைப்பு இன்னமுமே ?

—தனிப்பாடல்.

என்னை அவர் அற மறந்தும், யான் அவரை
மிக நினைந்திங்கு இருந்து வாட,
முன்னை வினைப் பயன்தானே? இப்பிறப்பில்
செய்த தவம் முடிந்தவாறோ?
கன்னன் மதன் அபிராமன் வரதுங்க
ராமன் இயல் காசி நாட்டில்
அன்ன வயல் குருகினங்காள்! இனி எவ்வாறு
உயிர் தரித்திங்கு ஆற்றுமாறே?

—தனிப்பாடல்.

மங்கல மங்கையராய், மன்னவர் கன்னியராய்,
மைந்தர் வயிற்றினராய், வாழ்வினர் ஆயதிலே
திங்கள் நிறைந்துவரும் சேயிழையார் நடைபோல்,
தென்றல் அசைந்துவரும் செந்தமிழ்
[நாடுடையாய் !

கங்கையின் நன்கொழுநா ! காவிரியின் கணவா !
கன்னிதன் நாயகமே! சென்னி நன்னாடுடையாய்!
எங்கள் இளங்கொடிதான் உங்கள் இளம்பிறையால்
எத்தனை கோடி இரா இப்படி வாடுவதே ?

தனிப்பாடல்.

# பத்துப்பாட்டு

வீர வேல், தாரை வேல் விண்ணோர் சிறைமீட்ட
தீர வேல், செவ்வேள் திருக்கை வேல் - வாரி
குளித்த வேல், கொற்ற வேல், சூர் மார்பும் குன்றும்
தொளைத்த வேல் உண்டே துணை.

குன்றம் எறிந்தாய் ! குரைகடலில் சூர்தடிந்தாய் !
புன் தலைய பூதப் பொரு படையாய் ! — என்றும்
இளையாய் ! அழகியாய் ! ஏறு ஊர்ந்தான் ஏறே !
உளையாய் ! என் உள்ளத்து உறை.

குன்றம் எறிந்ததுவும், குன்றப் போர் செய்ததுவும்
அன்றங்கு அமரர் இடர் தீர்த்ததுவும் - இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும், கல்பொதும்பில் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்.

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன் ;
பின்னை ஒருவரை யான் பின்செல்லேன்-பன்னிருகைக்
கோலப்பா ! வானோர் கொடிய வினை தீர்த்தருளும்
வேலப்பா ! செந்திவாழ் வே !

அஞ்சு முகம் தோன்றின், ஆறு முகம் தோன்றும்;
வெஞ்சமரில் 'அஞ்சல்'என வேல் தோன்றும்-நெஞ்சில்
ஒருகால் நினைக்கின், இருகாலும் தோன்றும்
'முருகா' என்று ஓதுவார் முன்.

—திருமுருகாற்றுப்படை.

## நீதிப்பாட்டு

இளமையும் நில்லா; யாக்கையும் நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுத்துணை ஆவது.

—மணிமேகலை.

நாளைச் செய்குவம் அறம் எனில், இன்றே
கேள்வி நல் உயிர் நீங்கினும் நீங்கும்;
இது என வரைந்து வாழும், நாள் உணர்ந்தோர்
முதுநீர் உலகின் முழுவதும் இல்லை.

—சிலப்பதிகாரம்.

பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லை; பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவ தில்லை; இடைநடுவில்
குறிக்கும் இச் செல்வம் 'சிவன் தந்தது' என்று கொடுக்
[கறியாது
இறக்கும் குலாமருக்கு என் சொல்லுவேன், கச்சி ஏகம்பனே!

—பட்டினத்தார் பாடல்.

முடி சார்ந்த மன்னரும், மற்றும் உளோரும், முடிவில் ஒரு
பிடி சாம்பராய் வெந்து மண்ணுவதுகண்டு, பின்னும் இந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால், பொன்னின் அம்பலவர்
அடி சார்ந்து, நாம் உய்யவேண்டும் என்றே அறிவார் இல்லையே.

—பட்டினத்தார் பாடல்.

பாலையாம் தன்மை செத்தும், பாலனும் தன்மை செத்தும்,
காளையாம் பருவம் செத்தும், காமுறும் இளமை செத்தும்,
மீளும் இவ் வயதும் இன்னே மேல்வரும் மூப்பும் ஆகி
நாளும் நாம் சாகின்றேமால், நமக்கு நாம் அழாதது என்னே!

—குண்டலகேசி.

மழை இன்றி மாநிலத்தார்க்கு இல்லை ; மழையும்
தவம் இலார் இல்வழி இல்லை ; தவமும்
அரசன் இலாவழி இல்லை ; அரசனும்
இல்வாழ்வார் இல்வழி இல்.

—நான்மணிக்கடிகை.

தன்னை வியந்து தருக்கலும், தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும் — முன்னிய
பல்பொருள் வெஃகும் சிறுமையும், இம் மூன்றும்
செல்வம் உடைக்கும் படை.

—திரிகடுகம்.

ஆக்கப் படுக்கும் ; அருந்தளைவாய்ப் பெய்விக்கும் ;
போக்கப் படுக்கும் ; புலை நரகத்து உய்ப்பிக்கும் ;
காக்கப் படுவன இந்திரியம் ஐந்தினும்
நாக்கல்லது இல்லை நனி வெல்லும் ஆறே.

—வளையாபதி.

உள்ளம் கவர்ந்து, எழுந்து, ஓங்கு சினம் காத்துக்
கொள்ளும் குணமே குணம் என்க—வெள்ளம்
தடுத்தல் அரிதோ? தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ ? விளம்பு.

—நன்னெறி.

தன் உயிர் தான் பரிந்து ஓம்புமாறு போல்
மன் உயிர் வைகலும் ஓம்பி வாழுமேல்,
இன் உயிர்க்கு இறைவனாய், இன்ப மூர்த்தியாய்,
பொன் உயிராய்ப் பிறந்து உய்ந்து போகுமே.

—சீவக சிந்தாமணி.

# திருக்குறள்

அகரம் முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு.

விண் இன்று பொய்ப்பின், விரிநீர் வியன்உலகத்து
உள்நின்று உடற்றும் பசி.

அந்தணர் என்போர் அறவோர்; மற்று எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டு ஒழுக லான்.

அன்றறிவாம் என்னாது அறம்செய்க; மற்றது
பொன்றுங்கால் பொன்றுத் துணை.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன், வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

பெண்ணின் பெருந்தக்க யாவுள, கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்?

ஈன்ற பொழுதின் பெரிதுஉவக்கும், தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

அன்பிலார் எல்லாம் தமக்கு உரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

மோப்பக் குழையும் அனிச்சம்; முகம் திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

இனிய உளவாக இன்னாத கூறல்,
கனி இருப்பக் காய்கவர்ந் தற்று.

காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்,
ஞாலத்தின் மாணப் பெரிது.

சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து ஒருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி.

எல்லார்க்கும் நன்றாம் பணிதல்; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.

ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம்; பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

ஏதிலார் குற்றம்போல் தம் குற்றம் காண்கிற்பின்
தீது உண்டோ மன்னும் உயிர்க்கு ?

தீயவை தீய பயத்தலால், தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

ஊருணி நீர்நிறைந் தற்றே, உலகு அவாம்
பேரறி வாளன் திரு.

ஈத்து உவக்கும் இன்பம் அறியார்கொல், தாம் உடைமை
வைத்து இழக்கும் வன்கண் ணவர் ?

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ் அல்லால்,
பொன்றாது நிற்பதொன்று இல்.

அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை . பொருள் இல்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு.

அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின், ஒன்றன்
உயிர் செகுத்து உண்ணாமை நன்று.

வேண்டிய வேண்டியாங்கு எய்தலால், செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

மழித்தலும் நீட்டலும் வேண்டா, உலகம்
பழித்தது ஒழித்து விடின்.

களவினால் ஆகிய ஆக்கம், அளவிறந்து
ஆவது போலக் கெடும்.

தன்நெஞ்சு அறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.

தன்னைத் தான் காக்கின் சினம் காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின், தமக்கு இன்னா
பிற்பகல் தாமே வரும்.

ஒன்றாக நல்லது கொல்லாமை; மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

நெருநல் உளன் ஒருவன், இன்று இல்லை, என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

பற்றுக பற்றற்றான் பற்றினை; அப் பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

எம்பொருள் எத்தன்மைத்து ஆயினும், அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

இரு வேறு உலகத்து இயற்கை; திரு வேறு
தெள்ளியர் ஆதலும் வேறு.

இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த
வகுத்தலும் வல்லது அரசு.

எண் என்ப, ஏனை எழுத்து என்ப, இவ்விரண்டும்
கண் என்ப, வாழும் உயிர்க்கு.

விலங்கொடு மக்கள் அனையர்; இலங்கு நூல்
கற்றாரோடு ஏனை யவர்.

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்; அச் செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர்.

தினைத் துணையாம் குற்றம் வரினும், பனைத் துணையாக்
கொள்வர் பழி நாணுவார்.

அரியவற்றுள் எல்லாம் அரிதே, பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

நிலத்து இயல்பால் நீர் திரிந்து அற்றாகும்; மாந்தர்க்கு
இனத்து இயல்பதாகும் அறிவு.

ஆக்கம் கருதி முதல் இழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்.

காலம் கருதி இருப்பர், கலங்காது
ஞாலம் கருது பவர்.

குணம் நாடி, குற்றமும் நாடி, அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல்.

இதனை, இதனன், இவன் முடிக்கும் என்று ஆய்ந்து
அதனை, அவன்கண் விடல்.

காக்கை கரவா கரைந்து உண்ணும்; ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள.

வான் நோக்கி வாழும் உலகெல்லாம், மன்னவன்
கோல் நோக்கி வாழும் குடி.

அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை?

பண் என்னும் பாடற்கு இயைபு இன்றேல்? கண் என்னும்
கண்ணோட்டம் இல்லாத கண்?

வெள்ளத்து அனைய மலர் நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு.

குடி என்னும் குன்றா விளக்கம், மடி என்னும்
மாசு ஊர மாய்ந்து கெடும்.

தெய்வத்தான் ஆகாது எனினும், முயற்சி தன்
மெய் வருத்தக் கூலி தரும்.

இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
அடுத்து ஊர்வது அஃதுஒப்பது இல்.

அறி கொன்று அறியான் எனினும், உறுதி
உழை இருந்தான் கூறல் கடன்.

சொல்லுக சொல்லைப், பிறிதோர் சொல் அச் சொல்லை
வெல்லும் சொல் இன்மை அறிந்து.

ஈன்றாள் பசி காண்பான் ஆயினும், செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப, எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

அன்பு,அறிவு, ஆராய்ந்தசொல்வன்மை,தூதுஉரைப்பார்க்கு
இன்றியமையாத மூன்று.

அகலாது அணுகாது தீக் காய்வார் போல்க;
இகல் வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார்.

அடுத்தது காட்டும் பளிங்குபோல், நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.

கற்றறிந்தார் கல்வி விளங்கும், கசடறச்
சொல் தெரிதல் வல்லார் அகத்து.

பகையகத்துச் சாவார் எளியர், அரியர்
அவையகத்து அஞ்சாதவர்.

தள்ளா விளையுளும், தக்காரும், தாழ்வுஇலாச்
செல்வரும் சேர்வது நாடு.

இல்லாரை எல்லாரும் எள்ளுவர்; செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு.

உடுக்கை இழந்தவன் கைபோல, ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

ஓதி உணர்ந்தும், பிறர்க்கு உரைத்தும், தான் அடங்காப்
பேதையின் பேதையார் இல்.

உலகத்தார் உண்டு என்பது இல் என்பான், வையத்து
அலகையா வைக்கப் படும்.

வில் ஏர் உழவர் பகை கொளினும், கொள்ளற்க
சொல் ஏர் உழவர் பகை.

வாள்போல் பகைவரை அஞ்சற்க ; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

இரு மனப் பெண்டிரும், கள்ளும், கவறும்
திரு நீக்கப்பட்டார் தொடர்பு.

மருந்து என வேண்டாவாம் யாக்கைக்கு; அருந்தியது
அற்றது போற்றி உணின்.

மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்,
உயிர் நீப்பர் மானம் வரின்.

பணியுமாம் என்றும் பெருமை ; சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து.

இன்னா செய்தார்க்கும், இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு ?

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்.

நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம் பழுத் தற்று.

'குடிசெய்வல்' என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடி தற்றுத் தான் முந் துறும்.

உழுது உண்டு வாழ்வாரே வாழ்வார்; மற் றெல்லாம்
தொழுது உண்டு பின்செல் பவர்.

இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக, உலகு இயற்றி யான்.

சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்.

# சிலப்பதிகாரம்

மூவுலகும் ஈரடியால் முறை நிரம்பா வகை முடிய,
தாவிய சேவடி சேப்ப, தம்பியொடும் கான் போந்து
சோஅரணும் போர் மடிய, தொல்இலங்கை கட்டழித்த
சேவகன் சீர் கேளாத செவிஎன்ன செவியே!
திருமால் சீர் கேளாத செவிஎன்ன செவியே!

பெரியவனை, மாயவனை, பேருலகம் எல்லாம்
விரி கமல உந்தியுடை விண்ணவனை, கண்ணும்
திருவடியும், கையும், திரு வாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்என்ன கண்ணே!
கண் இமைத்துக் காண்பார்தம் கண்என்ன கண்ணே!

மடம்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை, நூற்றுவர்பால் நால்திசையும் போற்ற,
படர்ந்துஆரணம் முழங்க, பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாஎன்ன நாவே
நாராயணா என்னா நாஎன்ன நாவே!

—ஆய்ச்சியர் குரவை.

## கண்ணகி தன் ஊரும் பேரும் உரைத்தல்

வாயில் கடைமணி நடுநா நடுங்க,
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுட, தான்தன்
அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்;
பெரும்பெயர்ப் புகார் என் பதியே : அவ்வூர்,
ஏசாச் சிறப்பின் இசை விளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை ஆகி
வாழ்தல் வேண்டி, ஊழ் வினை துரப்ப,
சூழ் கழல் மன்னா! நின் நகர்ப் புகுந்து, ஈங்கு
என் கால் சிலம்பு பகர்தல் வேண்டி, நின் பால்,
கொலைக் களப்பட்ட கோவலன் மனைவி;
கண்ணகி என்பது என் பெயரே.

## கற்பின் திறம்

மெய்யில் பொடியும், விரித்த கருங்குழலும்,
கையில் தனிச்சிலம்பும், கண்ணீரும்—வையைக்கோன்
கண்டளவே தோற்றான்; அக் காரிகைதன் சொல் செவியில்
உண்டளவே தோற்றான், உயிர்.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுவாளை,
தெய்வம் தொழும் தகைமை திண்ணிதால்—தெய்வமாய்
மண்ணக மாதர்க்கு அணியாய கண்ணகி
விண்ணக மாதர்க்கு விருந்து.

## மணிமேகலை

பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்;
பிறவார் உறுவது பெரும் பேரின்பம்;
பற்றின் வருவது முன்னது; பின்னது
அற்றோர் உறுவது அறிக.

கோல் நிலை திரிந்திடின் கோள் நிலை திரியும்,
கோள் நிலை திரிந்திடின் மாரி வறம் கூரும்;
மாரி வறம் கூரின் மன்உயிர் இல்லை.

மண் திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே.

விடுநில மருங்கில் படுபுல் ஆர்ந்து
நெடுநில மருங்கின் மக்கட்கு எல்லாம்

பிறந்தநாள் தொட்டும் சிறந்த தன் தீம்பால்
அறந் தரு நெஞ்சோடு அருள் சுரந்து ஊட்டும்
இதனொடு வந்த செற்றம் என்னை ?

'பாரகம் அடங்கலும் பசிப் பிணி அறுக' என
ஆதிரை இட்டனள் ஆருயிர் மருந்தென்.

நறுந் தாது உண்டு, நயனில் காலை
வறும் பூத் துறக்கும் வண்டு போல்குவம்.

மண் திணி ஞாலத்து மழைவளம் தரூஉம்
பெண்டிர் ஆயின் பிறர் நெஞ்சு புகாஅர்.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுது எழுவாள்
பெய் எனப் பெய்யும் பெரு மழை என்ற அப்
பொய்யில் புலவன் பொருள் உரை தேருய்.

மாதவர் நோன்பும், மடவார் கற்பும்
காவலன் காவல் இன்று எனில் இன்ருல்;
மகனை முறை செய்த மன்னவன் வழி, ஓர்
துயர் வினையாளன் தோன்றினன் என்பது
வேந்தர் தம் செவி உறுவதன் முன்னம்,
ஈங்கு இவன் தன்னையும் ஈமத்து ஏற்றி,
கணிகை மகளையும் காவல் செய் கென்றனள்
அணி கிளர் நெடு முடி அரசாள் வேந்து என்.

# நால்வர் நற்றமிழ்

## திருஞானசம்பந்தர்

தோடுடைய செவியன், விடைஏறி ஓர் தூவெண் மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசிஎன் உள்ளம் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்து ஏத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

மானின்நேர்விழி மாதராய்! வழுதிக்கு மாபெருந்தேவி கேள்!
'பானல் வாயொரு பாலன் ஈங்கு இவன்' என்று நீ பரிவு எய்திடேல்;
ஆனை மாமலை ஆதியாய இடங்களில் பலஅல்லல் சேர்
ஈனர்கட்கு எளியேன்அலேன்திரு ஆலவாய் அரன் நிற்கவே.

'வேயனைய தோள் உமையொர் பாகமதுஆக விடைஏறி
[சடைமேல்
தூய மதி சூடி, சுடு காடில் நடம் ஆடி, மலை தன்னை வினவில்
வாய்கலசமாக வழிபாடுசெய்யும் வேடன் மலராகும் நயனம்
காய் கணையினால் இடந்து, ஈசனடி கூடு காளத்தி மலையே.

வாழ்க அந்தணர், வானவர், ஆன் இனம்;
வீழ்க தண்புனல்; வேந்தனும் ஓங்குக;
ஆழ்க தீயதெல்லாம்; அரன் நாமமே
சூழ்க; வையகமும் துயர் தீர்கவே.

—தேவாரம்

## திருநாவுக்கரசர்

குனித்த புருவமும், கொவ்வைச் செவ் வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும், பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறும்
இனித்தம் உடைய எடுத்த பொன்பாதமும், காணப்பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

மெய்ம்மையாம் உழவைச் செய்து, விருப்பெனும் வித்தை வித்தி,
பொய்மையாம் களையை வாங்கி, பொறைஎனும் நீரைப் பாய்ச்சி,
தம்மையும் நோக்கிக் கண்டு, தகவு எனும் வேலியிட்டு,
செம்மையுள் நிற்பர் ஆகில், சிவகதி விளையும் அன்றே.

மாசில் வீணையும், மாலை மதியமும்
வீசு தென்றலும், வீங்கு இளவேனிலும்
மூசு வண்டு அறை பொய்கையும் போன்றதே,
ஈசன் எந்தை இணை அடி நீழலே.

பேர் ஆயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மானை,
　　பிரிவிலா அடியார்க்கு என்றும்,
வாராத செல்வம் வருவிப்பானை, மந்திரமும்
　　தந்திரமும் மருந்தும் ஆகி,
தீரா நோய் தீர்த்தருள வல்லான் தன்னை,
　　திரிபுரங்கள் தீஎழத் திண்சிலை கைக்கொண்ட-
போரானை, புள்ளிருக்கு வேளூரானை,
　　போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே.

நாம் ஆர்க்கும் குடிஅல்லோம்; நமனை அஞ்சோம்
　　நரகத்தில் இடர்ப்படோம்; நடலை இல்லோம்
ஏமாப்போம்; பிணிஅறியோம்; பணிவோம் அல்லோம்
　　இன்பமே, எந்நாளும் துன்பம் இல்லை;
தாம் ஆர்க்கும் குடிஅல்லாத் தன்மையான சங்கரன்
　　நற் சங்க வெண் குழையோர் காதின்,
கோமாற்கே நாம்என்றும் மீளா ஆளாய்க்
　　கொய் மலர்ச் சேவடியிணையே குறுகினோமே.

—தேவாரம்.

## சுந்தரமூர்த்தி

பொன்ஆர் மேனியனே! புலித்தோலை அரைக்கசைத்து,
மின்ஆர் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை அணிந்தவனே!
மன்னே! மாமணியே! மழபாடியுள் மாணிக்கமே!
அன்னே! உன்னைஅல்லால் இனி யாரை நினைக்கேனே?

மற்றுப் பற்றெனக்கின்றி, நின்திருப்
பாதமே மனம் பாவித்தேன்;
பெற்றலும் பிறந் தேன்இனிப் பிற
வாத தன்மைவந் தெய்தினேன்;
கற்றவர் தொழுதேத்தும் சீர்க்கரை
யூரில் பாண்டிக் கொடுமுடி
நற்றவா! உனை நான் மறக்கினும்
சொல்லும்நா நமச்சிவாயவே.

பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை,
போகமும் திருவும் புணர்ப்பானை,
பின்னை என் பிழையைப் பொறுப் பானை,
பிழையெலாம் தவிரப் பணிப் பானை,
இன்ன தன்மையன் என்றுஅறி யொண்ணு
எம்மானை, எளி வந்த பிரானை,
அன்னம் வைகும் வயல் பழனத்துஅணி
ஆரூரானை மறக்கலும் ஆமே!

பறக்கும் எம் கிள்ளைகாள்! பாடும் எம் பூவைகாள்!
அறக்கண் என்னத் தகும் அடிகள்ஆரூரரை
மறக்ககில் லாமையும், வளைகள் நில்லாமையும்,
உறக்கம் இல்லாமையும், உணர்த்த வல்லீர்களே.

ஏழிசையாய், இசைப் பயனுய்,
இன்அமுதாய், என்னுடைய
தோழனுமாய், யான் செய்யும்
துரிசுகளுக்கு உடனுகி,
மாழை ஒண்கண் பரவையைத் தந்து
ஆண்டானை, மதிஇல்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே.

—தேவாரம்.

## மாணிக்கவாசகர்

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என் ஒப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
வண்ணப் பணித்து என்னை 'வா' என்ற வான்கருணைச்
சுண்ணப் பொன் நீற்றற்கே சென்று ஊதாய் கோத்தும்பீ!

அம்மையே! அப்பா! ஒப்பிலா மணியே!
அன்பினில் விளைந்த ஆர் அமுதே!
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத் தலைப் புலையனேன் தனக்கு,
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே! சிவபெருமானே!
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே.

காதார் குழை ஆட, பைம்பூண் கலன் ஆட,
கோதை குழல் ஆட, வண்டின் குழாம் ஆட,
சீதப் புனல் ஆடிச் சிற்றம்பலம் பாடி
வேதப் பொருள் பாடி அப்பொருளா மாபாடி,
சோதி திறம் பாடி, சூழ் கொன்றைத் தார்பாடி
ஆதி திறம் பாடி, அந்தமாமாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய் வளைதன்
பாதத் திறம் பாடி ஆடேலோர் எம்பாவாய்.

முத்தி நெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனை,
பத்தி நெறி அறிவித்துப் பழ வினைகள் பாறும் வண்ணம்
சித்த மலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன் எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே.

அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய்! என்னை ஆட்கொண்டபோதே, கொண்டிலையோ?
இன்றோர் இடையூறு எனக்கு உண்டோ? எண்தோள் முக்கண் [எம்மானே!
நன்றே செய்வாய்! பிழை செய்வாய்! நானோ இதற்கு நாயகமே?

—திருவாசகம்.

# ஆழ்வார்கள் அருந்தமிழ்

உளன் கண்டாய் நல்நெஞ்சே—உத்தமன் என்றும்
உளன் கண்டாய் உள்ளுவார் உள்ளத்து—உளன் கண்டாய்
வெள்ளத்தில் உள்ளானும், வேங்கடத்தில் உள்ளானும்
உள்ளத்தில் உள்ளான் என்று ஓர்.

— பொய்கை ஆழ்வார்.

யானே தவம் செய்தேன் ; ஏழ் பிறப்பும் எப்பொழுதும்
யானே தவம்உடையேன், எம்பெருமான்—யானே
இருந்தமிழ் நல்மாலை இணைஅடிக்கே சொன்னேன்
பெருந்தமிழன் நல்லேன் பெரிது.

—பூதத்தாழ்வார்.

தாழ் சடையும், நீள் முடியும், ஒண் மழுவும், சக்கரமும்
சூழ் அரவும், பொன் நாணும், தோன்றுமால்—சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்ருய் இசைந்து.

—பேயாழ்வார்.

குடதிசை முடியை வைத்து, குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்புகாட்டி, தென்திசை இலங்கை நோக்கி,
கடல் நிறக் கடவுள்எந்தை அரவணைத் துயிலுமா கண்டு
உடல் எனக்கு உருகுமாலோ, என்செய்கேன் உலகத்தீரே!

—தொண்டரடிப்பொடியாழ்வார்.

துப்புடையாரை அடைவதெல்லாம், சோர்விடத்துத் துணையாவர்என்றே
ஒப்பிலேன் ஆகிலும் நின்அடைந்தேன், ஆனைக்கு நீ அருள் செய்தமையால்
எய்ப்பு என்னை வந்து நலியும்போது அங்கு ஏதும் நான் உன்னை நினைக்கமாட்டேன்
அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்தேன் அரங்கத்துஅரவணைப்
பள்ளியானே!

—பெரியாழ்வார்.

ஆழி மழைக்கண்ணு! ஒன்று நீ கை கரவேல்;
ஆழியுள் புக்கு, முகந்துகொடு, ஆர்த்து ஏறி,
ஊழி முதல்வன் உருவம்போல் மெய் கறுத்து,
பாழியந் தோள் உடைப் பற்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்று அதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய்; நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்து—ஏலோர் எம்பாவாய்.

—திருப்பாவை.

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே!
நெடியானே! வேங்கடவா! நின்கோயிலின் வாசல்
அடியாரும், வானவரும், அரம்பையரும் கிடந்து இயங்கும்
படியாய்க் கிடந்துஉன் பவள வாய் காண்பேனே.

—குலசேகராழ்வார்.

மன்னு புகழ்க்கோசலைதன் மணி வயிறு வாய்த்தவனே!
தென்இலங்கைக் கோன் முடிகள் சிந்துவித்தாய்! செம்பொன் சேர்
கன்னி நன்மா மதிள் புடைசூழ் கணபுரத்துஎன் கருமணியே!
என்னுடைய இன்னமுதே! இராகவனே! தாலேலோ.

—குலசேகராழ்வார்.

குலம் தரும்; செல்வம் தந்திடும்; அடியார் படு துயராயின எல்லாம்
நிலந் தரம் செய்யும்; நீள்விசும்பு அருளும்; அருளொடு பெரு நிலம் அளிக்கும்
வலம்தரும்; மற்றும் தந்திடும்; பெற்ற தாயினும் ஆயின செய்யும்
நலம்தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன், நாராயணா என்னும் நாமம்.

—திருமங்கை ஆழ்வார்.

குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்
அன்று ஞாலம் அளந்த பிரான், பரன்
சென்று சேர்திரு வேங்கட மாமலை
ஒன்றுமே தொழ நம்வினை ஓயுமே.

—திருவாய்மொழி.

விண்மீது இருப்பாய்; மலைமேல் நிற்பாய்; கடல் சேர்ப்பாய்
மண்மீது உழல்வாய்; இவற்றுள் எங்கும் மறைந்து உறைவாய்
எண்மீது இயன்ற புறஅண்டத்தாய்; எனது ஆவி
உள்மீது ஆடி உருக் காட்டாதே ஒளிப்பாயோ?

—திருவாய்மொழி.

## பரணிப் பாட்டு

### போர்க்களம்

எடும்எடும் எடும் என எடுத்ததோர்
இகல்ஒலி கடல்ஒலி இகக்கவே,
விடுவிடு விடுபரி கரிக் குழாம்
விடும்விடும் எனும் ஒலி மிகைக்கவே.

குருதியின் நதி வெளி பரக்கவே,
குடை இனம் நுரைஎன மிதக்கவே,
கரி துணிபடும் உடல் அடுக்கியே,
கரை என இருபுடை கிடக்கவே.

கன வரையொடு வரை முனைத்த போல்
கட கரியொடு கரி முனைக்கவே,
இன முகில் முகிலொடும் எதிர்த்தபோல்
இரதமொடு இரதமும் எதிர்க்கவே.

விருந்தினரும் வறியவரும் நெருங்கி உண்ண
மேன்மேலும் முகம் மலரும் மேலோர் போல,
பருந்தினமும், கழுகினமும் தாமே உண்ண,
பதுமமுகம் மலர்ந்தாரைப் பார்மின்! பார்மின்!

சாம்அளவும் பிறர்க்கு உதவா தவரை நச்சிச்
சாருநர்போல் வீரருடல் தரிக்கும் ஆவி
போம்அளவும், அவர்அருகே இருந்துவிட்டுப்
போகாத நரிக் குலத்தின் புணர்ச்சி காண்மின்!

சாய்ந்து விழும் கடகளிற்றின் உடனே சாய்ந்து,
தடங்குருதி மிசைப் படியும் கொடிகள் தங்கள்
காந்தருடன் கனல் அமளி அதன்மேல் வைகும்
கற்புடை மாதரை ஒத்தல் காண்மின்! காண்மின்!

வாய் மடித்துக் கிடந்த தலைமகனை நோக்கி
'மணி அதரத்து ஏதேனும் வடு உண்டாயோ ?
நீ மடித்துக் கிடந்தது' எனப் புலவி கூர்ந்து
நின்று ஆவி சோர்வாளைக் காண்மின்! காண்மின்!

பொருதடக்கை வாள் எங்கே? மணிமார்பு எங்கே?
போர்முகத்தில் எவர் வரினும் புறம் கொடாத
பருவயிரத் தோள் எங்கே ? எங்கே ? என்று
பயிரவியைக் கேட்பாளைக் காண்மின்! காண்மின்!

பொன்னித் துறைவனை வாழ்த்தினவே;
பொருநைக் கரையனை வாழ்த்தினவே;
கன்னிக் கொழுநனை வாழ்த்தினவே;
கங்கை மணாளனை வாழ்த்தினவே.

—கலிங்கத்துப்பரணி.

## பள்ளியெழுச்சிப் பாட்டு

கூவின பூங்குயில், கூவின கோழி,
குருகுகள் இயம்பின, இயம்பின சங்கம்;
ஓவின தாரகை ஒளி, ஒளி உதயத்து
ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்குத்
தேவ நற் செறி கழல் தாளிணை காட்டாய்
திருப் பெருந்துறை உறை சிவபெருமானே!
யாவரும் அறிவரியாய் எமக்கு எளியாய்!
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

இன்னிசை வீணையர், யாழினர் ஒருபால்;
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்;
துன்னிய பிணை மலர்க் கையினர் ஒருபால்;
தொழுகையர், அழுகையர், துவள்கையர் ஒருபால்;

சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்;
திருப் பெருந்துறை உறை சிவபெரு மானே!
என்னையும் ஆண்டுகொண்டு இன்னருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தரு ளாயே.

—திருவாசகம்.

கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்;
கனைஇருள் அகன்றது, காலையம் பொழுதாய்
மதுவிரிந் தொழுகின மாமலர் எல்லாம்;
வானவர், அரசர்கள் வந்துவந்து ஈண்டி
எதிர்திசை நிறைந்தனர், இவரொடும் புகுந்த
இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல் போன்றுள தெங்கும்
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தரு ளாயே.

புலம்பின புட்களும் பூம்பொழில் களின்வாய்
போயிற்றுக் கங்குல், புகுந்தது புலரி;
கலந்தது குணதிசைக் கனைகடல் அரவம்;
களிவண்டு மிழற்றிய கலம்பகம், புனைந்த
அலங்கலந் தொடையல் கொண்டு அடிஇணை பணிவான்
அமரர்கள் புகுந்தனர் ஆதலின் அம்மா!
இலங்கையர் கோன் வழிபாடு செய்கோயில்
எம்பெருமான்! பள்ளி எழுந்தரு ளாயே.

—தொண்டரடிப்பொடி ஆழ்வார்.

ஒருமையின் உலகெலாம் ஓங்குக! எனவே,
ஊதின சின்னங்கள்; ஊதின சங்கம்;
பெருமைகொள் சமரச சுத்த சன் மார்க்கப்
பெரும்புகழ் பேசினர்; பெரியவர் சூழ்ந்தார்;
அருமையும் எளிமையும் ஆகி அன்றாகி
அம்பலத்தே சித்தி ஆடல் செய் பதியே!
இருமையும் அளித்த என் அருட்பெருஞ் சோதி!
என் அரசே! பள்ளி எழுந்தருள் வாயே.

—திருவருட்பா.

# ஆற்றுப் பாட்டு

## காவேரி

உழவர் ஓதை, மதகோதை, உடைநீர் ஓதை, தண்பதம்கொள்
விழவர் ஓதை, சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி காவேரி!
விழவர் ஓதை சிறந்தார்ப்ப நடந்த எல்லாம், வாய்காவா
மழவர் ஓதை வளவன் தன் வளனே வாழி காவேரி!

மருங்கு வண்டு சிறந்தார்ப்ப, மணிப்பூ ஆடை அதுபோர்த்துக்
கருங் கயற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி !
கருங் கயற்கண் விழித்தொல்கி நடந்தஎல்லாம் நின் கணவன்
திருந்து செங்கோல் வளையாமை அறிந்தேன் வாழி காவேரி!

பூஆர் சோலை மயில்ஆல, புரிந்து குயில்கள் இசைபாட,
காமர் மாலை அருகசைய நடந்தாய் வாழி காவேரி!
காமர் மாலை அருகசைய நடந்த எல்லாம் நின் கணவன்
நாம வேலின் திறம்கண்டே அறிந்தேன் வாழி காவேரி !

—சிலப்பதிகாரம்

பாடல்சால் சிறப்பின் பரதத்து ஓங்கிய
கோடாச் செங்கோல் சோழர்தம் குலக்கொடி
கோள்நிலை திரிந்து கோடை நீடினும்
தான் நிலைதிரியாத் தண் தமிழ்ப் பாவை.

—மணிமேகலை.

## வைகை

புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி
வையை என்ற பொய்யாக் குலக்கொடி.

—சிலப்பதிகாரம்.

நாரி இடப் பாகருக்கு நஞ்சளித்த பாவிஎன்று
வாரியிடம் புகுதா வையையே! —வாரி
இடத்தும், புறத்தும், இரு கரையும் பாய்ந்து
நடத்தும் தமிழ்ப் பாண்டி நாடு.

## கோதாவரி

புவியினுக்கு அணியாய், ஆன்ற பொருள்தந்து, புலத்திற்றாகி
அவியகத் துறைகள் தாங்கி, ஐந்திணை நெறி அளாவி,
சவியுறத் தெளிந்து, தண்ணென்று, ஒழுக்கமும் தழுவி, சான்றோர்
கவி எனக் கிடந்த கோதாவரியினை வீரர் கண்டார்.

—கம்பராமாயணம்.

# அம்மானைப் பாட்டு

வீங்குநீர் வேலி உலகாண்டு விண்ணவர்கோன்
ஓங்கு அரணம் காத்த உரவோன் யார் அம்மானை ?
ஓங்கு அரணம் காத்த உரவோன் உயர் விசும்பில்
தூங்கு எயில் மூன்று எறிந்த சோழன்காண் அம்மானை;
சோழன் புகார்நகரம் பாடேலோர் அம்மானை.

புறவு நிறை புக்குப் பொன் உலகம் ஏத்தக்
குறைவில் உடம்பு அரிந்த கொற்றவன் யார் அம்மானை?
குறைவில் உடம்பு அரிந்த கொற்றவன் முன்வந்த
கறவை முறைசெய்த காவலன்காண் அம்மானை;
காவலன் பூம்புகார் பாடேலோர் அம்மானை.

கடவரைகள் ஓர் எட்டும் கண் இமையா காண
வடவரைமேல் வாள்வேங்கை ஒற்றினன் யார் அம்மானை ?
வடவரைமேல் வாள்வேங்கை ஒற்றினன், திக்குஎட்டும்
குடைநிழலில் கொண்டு அளித்த கொற்றவன்காண் அம்மானை.
கொற்றவன்தன் பூம்புகார் பாடேலோர் அம்மானை.

—சிலப்பதிகாரம்.

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன், தென்னன், பெருந்துறையான், பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனி ஆக்கித் தன்கருணை
வெள்ளத்து அழுத்தி, வினைகடிந்த வேதியனை,
தில்லை நகர் புக்குச் சிற்றம்பலம் மன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

கையார் வளைசிலம்ப, காதார் குழை ஆட,
மையார் குழல் புரள, தேன்பாய, வண்டு ஒலிப்ப,
செய்யானை, வெண்ணீறு அணிந்தானைச் சேர்ந்து அறியாக்
கையானை, எங்கும் செறிந்தானை, அன்பர்க்கு
மெய்யானை, அல்லாதார்க்கு அல்லாத வேதியனை,
ஐயாறு அமர்ந்தானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

—திருவாசகம்.

# திருத்தொண்டர் புராணம்

செந்தழல் ஒளியிற் பொங்கும் தீபமா மரங்க ளாலும்
மந்திகள் முறையில் வைத்த மணி விளக்கு ஒளிகளாலும்
ஐந்தும் ஆறு அடக்கி உள்ளார் அரும்பெருஞ் சோதியாலும்
எந்தையார் திருக்காளத்தி மலையினில் இரவு ஒன்றில்லை.

மாகம் ஆர் திருக்காளத்தி மலை எழு கொழுந்தாய் உள்ள
ஏக நாயகரைக் கண்டார், எழுந்த பேருவகை அன்பின்
வேகமானது மேல் செல்ல, மிக்கதோர் விரைவி னோடு
மோகமாய் ஓடிச் சென்றார், தழுவினார் மோந்து நின்றார்.

* * *

சிந்தை இடையறு அன்பும், திருமேனி தன்னில் அசைவும்
கந்தம் மிகையாம் கருத்தும், கை உழவாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும், வடிவில் பொலிதரு நீறும்
அந்தம் இலாத் திரு வேடத் தரசும் எதிர் வந்தணைய

* * *

திசை யனைத்தின் பெருமைஎலாம் தென்திசையே வென்று ஏற,
மிசை உலகும், பிற உலகும் மேதினியே தனி வெல்ல,
அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்ல,
இசை முழுதும் மெய அறிவும் இடம்கொள்ளும் நிலைபெருக

* * *

சிவன்அடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்,
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்,
உவமை இலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ் ஞானம்,
தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார்அந்நிலையில்.

'சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்
இனிஎதிர் காலத்தின் சிறப்பும்
இன்று எழுந்தருளப் பெற்ற பேறிதனால்
என்றைக்கும் திருவருள் உடையேம்;
நன்றிஇல் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற்று ஒளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம்' என்பார்.

* * *

கற்பகத்தின் பூங்கொம்போ? காமன்தன் பெருவாழ்வோ?
பொற்பு உடைய புண்ணியத்தின் புண்ணியமோ? புயல்சுமந்து,
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ?
அற்புதமோ? சிவனருளோ? அறியேன் என்று அதிசயித்தார்

'முன்னே வந்து எதிர் தோன்றும் முருகனோ? பெருகு ஒளியால்
தன் நேர் இல் மாரனோ? தார் மார்பின் விஞ்சையனோ?
மின் ஏர் செஞ் சடை அண்ணல் மெய் அருள் பெற்று உடையவனோ!
என்னே! என் மனம் திரித்த இவன் யாரோ ?'' என நினைந்தார்.

* * *

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆக, குணம் ஒரு மூன்றும்
திருந்து சாத்துவிகமே ஆக,
இந்து வாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப் பெருங் கூத்தின்
வந்த பேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

* * *

'வரும் இவள் நம்மைப் பேணும் அம்மைகாண்; உமையே! மற்றிப்
பெருமைசேர் வடிவும் வேண்டிப் பெற்றனள்' என்று, பின்றை
அருகில் வந்து அணைய நோக்கி, 'அம்மையே' என்னும் செம்மை
ஒரு மொழி, உலகம் எல்லாம் உய்யவே அருளிச் செய்தார்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
'பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்பு உண்டேல், உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும், நான் மகிழ்ந்துபாடி
அறவா! நீ ஆடும்போது உன் அடியின் கீழ்இருக்க'' என்றார்.

# கம்பராமாயணம்

## கோசல நாடு

தாதுகு சோலைதோறும், சண்பகக் காடுதோறும்
போதவிழ் பொய்கைதோறும், புதுமணல் தடங்கள்தோறும்
மாதவி வேலிப் பூக வனந்தொறும், வயல்கள்தோறும்
ஓதிய உடம்புதோறும் உயிர் என உலாயது அன்றே.

## மருத நில மாட்சி

தண்தலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க,
தெண்திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட,மருதம் வீற்றிருக்கும் மாதோ.

## சோலையின் செழுமை

குயிலினம் வதுவை செய்ய, கொம்பிடைக் குளிக்கும் மஞ்ஞை
அயில்விழி மகளிர் ஆடும் அரங்கினுக்கு அழகு செய்ய
பயில்சிறை அரச அன்னம் பன்மலர்ப் பள்ளி நின்றும்
துயில் எழ, தும்பி காலைச் செவ்வழி முரல்வ சோலை.

## மனையற மாண்பு

பெருந் தடங்கண் பிறை நுதலார்க் கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே?

## குறைவிலா நிறைவு

வண்மை இல்லை, ஓர் வறுமை இன்மையால்;
திண்மை இல்லை, நேர் செறுநர் இன்மையால்;
உண்மை இல்லை, பொய் உரை இலாமையால்;
வெண்மை இல்லை, பல் கேள்வி மேவலால்.

கல்லாது நிற்பார் பிறர் இன்மையின் கல்வி முற்ற
வல்லாரும் இல்லை, அவை வல்லர் அல்லாரும் இல்லை;
எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை, உடையார்களும் இல்லை மாதோ.

'எய்'என எழுபகை எங்கும் இன்மையால்,
மொய்பெரு தினவுறு முழவுத் தோளினான்
வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர்
செய் எனக் காத்து இனிது அரசு செய்கின்றான்.

## இயற்கையின் எழில்

வண்ண மாலை கைபரப்பி, உலகை வளைத்த இருள் எல்லாம்
உண்ண எண்ணித் தண்மதியத்து உதயத்தெழுந்த நிலாக்கற்றை
விண்ணும் மண்ணும் திசை அனைத்தும் விழுங்கிக் கொண்ட விரிநன்னீர்ப்
பண்ணை வெண்ணெய்ச் சடையன்தன் புகழ்போல் எங்கும் பரந்தனவால்.

எண்ணரிய மறையினொடு கின்னரர்கள் இசை பாட, உலகம் ஏத்த
விண்ணவரும் முனிவர்களும் வேதியரும் கரம் குவிப்ப, வேலை என்னும்
மண்ணுமணி முழவு அதிர, வான்அரங்கில் நடம்புரிவாள் இரவியான
கண்ணுதல் வானவன் கனகச் சடை விரிந்தால் என விரிந்த கதிர்கள் எல்லாம்.

## அநுமன் கண்ட இலங்கை

நன்னகர் அதனை நோக்கி, நளினக்கை மறித்து,'நாகர்
பொன்னகர் இதனை ஒக்கும் என்பது புல்லிதம்மா!
அந்நகர் இதனின் நன்றே;அண்டத்தை முழுதும் ஆள்வான்
இந்நகர் இருந்து வாழ்வான்; இது அதற்கு ஏது' என்றான்.

தேவர் என்பவர் யாவரும் இத்திரு நகர்க்கு இறைவற்கு
ஏவல் செய்கிலார் ஏவரே, எண்வகை உருவின்
மூவர் தம்மினும் அதிகன் என்றால் இவன் முயன்ற
தாவில் மாதவம் அல்லது பிறிதொன்று தருமோ ?

தெய்வத் தச்சனைப் புகழ்துமோ? செங்கண் வாளரக்கன்
மெய்ஒத்து ஆற்றிய தவத்தையே வியத்துமோ ? விரிஞ்சன்
ஐயப்பாடு இலா வரத்தையே மதித்துமோ? அறியாத்
தொய்யல் சிந்தையாம் யாவரை யாதென்று துதிப்பாம்?

பளிக்கு மாளிகைத் தலந்தொறும், இடந்தொறும், பசுந்தேன்
துளிக்கும் கற்பகத் தண் நறும் சோலைகள்தோறும்
அளிக்கும் தேறல் உண்டு, ஆடுநர் பாடுநர் ஆகி,
களிக்கின்றார் அலால் கவல்கின்றார் ஒருவரைக் காணேன்.

## சிறையிருந்த சீதை

வல்மருங்குல் வாள் அரக்கியர் நெருக்க அங்கிருந்தாள்
கல்மருங்கு எழுந்து, என்றும் ஓர் துளிவரக் காணு
நல் மருந்துபோல் நலன் அற உணங்கிய நங்கை
மெல்மருங்குல்போல் வேறு உள அங்கமும் மெலிந்தாள்.

விழுதல், விம்முதல், மெய்யுற வெதும்புதல், வெருவல்
எழுதல், ஏங்குதல், இரங்குதல், இராமனை எண்ணித்
தொழுதல், சோருதல், துளங்குதல், துயருழந்து உயிர்த்தல்
அழுதல் அன்றி மற்று அயலொன்றும் செய்குவது அறியாள்.

ஆவி அம்துகில் புனைவதொன்று அன்றி வேறு அறியாள்
தூவி அன்னம், மென்புனலிடைத் தோய்கிலா மெய்யாள்
தேவு தெண்கடல் அமிழ்துகொண்டு அனங்கவேள் செய்த
ஓவியம் புகை உண்டதே ஒக்கின்ற உருவாள்.

'அருந்தும் மெல் அடகு ஆரிட அருந்தும்' என்று அழுங்கும்;
'விருந்து கண்டபோது என்உறுமோ' என்றுவிம்மும்;
'மருந்தும் உண்டுகொல் யான்கொண்ட நோய்க்கு' என்று மயங்கும்;
இருந்த மாநிலம் செல் அரித்திடவும் ஆண்டு எழாதாள்.

'மெய்த் திருப் பதம் மேவு' என்ற போதினும்
'இத்திருத் துறந்து ஏகு' என்ற போதினும்
சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை
ஒத்திருந்த முகத்தினை உன்னுவாள்.

ஆழநீர்க் கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக்கு 'எம்பிநின் தம்பி' நீ
தோழன், மங்கை கொழுந்தி' எனச் சொன்ன
வாழி நண்பினை உன்னி மயங்குவாள்.

பொறை இருந்து ஆற்றி என் உயிரும் போற்றினேன்
அறையிரும் கழலவன் காணும் ஆசையால்
நிறை இரும் பல்பகல் நிருதர் நீள்நகர்
சிறை இருந்தேனையும் புனிதன் தீண்டுமோ?

வஞ்சனை மானின்பின் மன்னைப் போக்கி என்
மஞ்சனை வைது'பின் வழிக் கொள்வாய்'என
நஞ்சு அனையான் அகம் புகுந்த நங்கையான்
உஞ்சனென் இருத்தலும் உலகம் கொள்ளுமோ?

ஆதலான் இறத்தலே அறத்தின் ஆறு, எனச்
சாதல் காப்பவரும் என்தவத்தில் சாம்பினர்;
ஈதலாது இடமும் வேறு இல்லை என்று ஒரு
போது உலாம் மாதவிப் பொதும்பர் எய்தினள்.

கண்டனன் அனுமனும், கருத்தும் எண்ணினன்;
கொண்டனன் துணுக்கம், மெய் தீண்டக் கூசுவான்;
'அண்டர் நாயகன் அருள்தூதன் யான்' எனத்
தொண்டைவாய் மயிலினைத் தொழுது தோன்றினன்.

மும்மையால் உலகம் தந்த முதல்வற்கு முதல்வன் தூதாய்
செம்மையால் உயிர் தந்தாய்க்குச் செயல் என்னால் எளியது உண்டே!
அம்மையாய், அத்தனாய அப்பனே! அருளின் வாழ்வே!
இம்மையே மறுமைதானும் நல்கினை இசையோடு என்றாள்.

பாழிய பணைத்தோள் வீர! துணையிலேன் பரிவு தீர்த்த
வாழியவள்ளலே!யான் மறுவிலா மனத்தேன் என்னில்
ஊழி ஓர்பகலாய் ஓதும் ஆண்டெலாம் உலகம் ஏழும்
ஏழும் வீவுற்றஞான்றும் இன்றென இருத்தி என்றாள்.

இன்னும் ஈண்டு ஒரு திங்கள் இருப்பல் யான்
நின்னை நோக்கிப் பகர்ந்தது நீதியோய்!
பின்னை ஆவி பிடிக்கின்றிலேன் அந்த
மன்னன் ஆணை; இதனை மனக்கொள் நீ.

ஆரம் தாழ் திருமார்பற்கு அமைந்த தோர்
தாரம்தான் அலனேனும், தயாஎனும்
ஈரம்தான் அகத்து இல்லை என்றாலும், தன்
வீரம் காத்தலை வேண்டு என்று வேண்டுவாய்.

வந்தெனைக் கரம் பற்றிய வைகல்வாய்
'இந்த இப்பிறவிக்கு இருமாதரைச்
சிந்தையாலும் தொடேன்' என்ற செவ்வரம்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய்.

தன்னை நோக்கி உலகம் தளர்தற்கும்,
அன்னை நோய்க்கும், பரதன் அங்கு ஆற்றுறும்
இன்னல் நோய்க்கும், அங்கு ஏகுவது அன்றியே
என்னை நோக்கி இங்கு எங்ஙனம் எய்துமோ?

கண்டனென் கற்பினுக்கு அணியைக் கண்களால்
தெண்திரை அலைகடல் இலங்கைத் தென்னகர்
அண்டர்நாயக ! இனித் துறத்தி ஐயமும்,
பண்டுள துயரும் என்று அனுமன் பன்னுவான்.

உன் பெருந் தேவி என்னும் உரிமைக்கும், உன்னைப் பெற்ற
மன் பெரு மருகி என்னும் வாய்மைக்கும், மிதிலை மன்னன்
தன் பெருந் தனயை என்னும் தகைமைக்கும் தலைமை சான்றாள்
என் பெருந் தெய்வம் ஐயா ! இன்னமும் கேட்டி என்பான்.

உன்குலம் உன்னதாக்கி, உயர் புகழ்க்கு ஒருத்திஆய
தன்குலம் தன்னதாக்கித், தன்னை இத் தனிமை செய்தான்
வன்குலம் கூற்றுக்கு ஈந்து, வானவர் குலத்தை வாழ்வித்து,
என்குலம் எனக்குத் தந்தாள், என் இனிச் செய்வது எம்மோய் !

விற்பெருந் தடந்தோள் வீர! வீங்குநீர் இலங்கை வெற்பில்,
நற்பெருந் தவத்தள் ஆய நங்கையைக் கண்டேன் அல்லேன்;
இற்பிறப்பு என்பதொன்றும், இரும்பொறை என்பதொன்றும்,
கற்பெனும் பெயரதொன்றும் களிநடம் புரியக் கண்டேன்.

வேலையுள் இலங்கை என்னும் விரிநகர் ஒருசார், விண்தோய்
காலையும் மாலைதானும் இல்லதோர் கனகக் கற்பச்
சோலையங்கு அதனில், உம்பி புல்லினால் தொடுத்த தூய
சாலையின் இருந்தாள் ஐய! தவம் செய்த தவமாம் தையல்.

சோகத்தாள் ஆய நங்கை கற்பினால் தொழுதற்கு ஒத்த
மாகத்தார் தேவிமாரும் வான்சிறப்புற்றார்; மற்றைப்
பாகத்தாள் இப்போது ஈசன் மகுடத்தாள், பதுமத்தாளும்
ஆகத்தாள் அல்லள், மாயன் ஆயிரம் மௌலி மேலாள்.

## இராவணனைச் சீதை இகழ்தல்

வல்லியம் மருங்கு கண்ட மானென மறுக்கம் உற்று
மெல்இயல் ஆக்கை முற்றும் நடுங்கினள், விம்முகின்றாள்
கொல்லிய வரினும் உள்ளம் கூறுவன் தெரிய என்னாப்
புல்லிய கிடந்தது ஒன்றை நோக்கினள் புகல்வதானாள்.

ஊண் இலா யாக்கை பேணி, உயர்புகழ் சூடாது, உன்முன்
நாணிலாது இருந்தேன் அல்லேன், நவை அறு குணங்கள் என்னும்
பூணெலாம் பொறுத்தமேனிப் புண்ணிய மூர்த்தி தன்னைக்
காணலாம் இன்னும் என்னும் காதலால் இருந்தேன் கண்டாய்!

பழிஇது பாவம் என்று பார்க்கிலை; பகரத் தக்க
மொழிஇவை அல்ல என்பது உணர்கிலை; முறைமை நோக்காய்;
கிழிகிலை நெஞ்சம்; வஞ்சக் கிளையொடும் இன்றுகாறும்
அழிகிலை;என்றபோது என்கற்பென்னும்,அறந்தான்என்னும்?

## போர்க்களத்தில் சீதையின் கண்ணீர்

மங்கை அழலும் வான்நாட்டு மயில்கள் அழுதார்; மழவிடையோன்
பங்கில் உறையும் குயிலழுதாள்; பதுமத்திருந்த மாதழுதாள்;
கங்கை அழுதாள்; நாமடந்தை அழுதாள்; கமலத் தடங்கண்ணன்
தங்கை அழுதாள்; இரங்காத அரக்கிமாரும் தளர்ந்து அழுதார்.

எண்ணு மயலோடும் இருந்தது நின்
புண்ணுகிய மேனி பொருந்திடவோ ?
மண்ணோர் உயிரே! இமையோர் வலியே!
கண்ணே! அமுதே! கருணுகரனே !

மேவிக் கனல்முன் மிதிலைத் தலைஎன்
பாவிக்கை பிடித்தது பண்ணவ! நின்
ஆவிக்கொரு கோள் வரவோ? அலர்வாழ்
தேவிக்கமுதே! மறையின் தெளிவே !

மேதா இளையோய் ! விதியார் விளைவால்
போதா நெறி எம்மொடு போதுறு நாள்
'மூதானவன்முன்னர் முடிந்திடு' எனும்
மாதா உரையின் வழிநின் றனையோ?

## தேற்றிய திரிசடையைச் சீதை போற்றுதல்

அன்னே ! நீ உரைத்தரு ஒன்றும் அழிந்திலது, ஆதலானே
உன்னையே தெய்வமாக் கொண்டு, இத்தனை காலம் உய்ந்தேன் ;
இன்னம், இவ்விரவு முற்றும் இருக்கின்றேன்; இறத்தல் என்பால்
முன்னமே முடிந்தது அன்றே என்றனள் முளரி நீத்தாள்.

நாணெலாம் துறந்தேன்; இல்லின் நன்மையின் நல்லார்க்கு ஏய்ந்த
பூணெலாம் துறந்தேன்; என்தன் பொருசிலை மேகந்தன்னைக்
காணலாம் என்னும்ஆசை கடுக்க என் ஆவி காத்தேன்;
ஏணிலா உடலம் நீக்கல் எளிதெனக்கு எனவும் சொன்னாள்.

## கற்பின் திறம்

உண்ணாதே உயிருண்ணாது ஒரு நஞ்சு:
சனகியெனும் பெருநஞ்சு உன்னைக்
கண்ணாலே நோக்கவே போக்கியதே
உயிர்; நீயும் களப்பட்டாயே!
எண்ணாதேன் எண்ணிய சொல் இன்றினித்தான்
எண்ணுதியோ? எண்ணில் ஆற்றல்
அண்ணாவோ! அண்ணாவோ! அசுரர்கள்தம்
பிரளயமே! அமரர் கூற்றே!

வெள்எருக்கம் சடைமுடியான் வெற்பெடுத்த
திருமேனி, மேலும் கீழும்
எள் இருக்கும் இடம் இன்றி, உயிர் இருக்கும்
இடம் நாடி இழைத்த வாறோ ?
கள் இருக்கும் மலர்க் கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள் இருக்கும் எனக் கருதி உடல் புகுந்து
தடவியதோ? ஒருவன் வாளி.

## அறத்தின் வெற்றி

ஏழை சோபனம்; ஏந்திழை சோபனம் ;
வாழி சோபனம்; மங்கல சோபனம்;
ஆழி ஆன அரக்கனை, ஆரியச்
சூழியானை துகைத்தது சோபனம்.

கற்பினுக்கு அரசினை, பெண்மைக் காப்பினை,
பொற்பினுக்கு அழகினை, புகழின் வாழ்க்கையை,
தற்பிரிந்து அருள்புரி தருமம் போலியை
அற்பின் அத் தலைவனும் அமைய நோக்கினான்.

அரியணை அனுமன் தாங்க, அங்கதன் உடைவாள் ஏந்த,
பரதன் வெண் குடை கவிக்க, இருவரும் கவரிவீச,
விரைசெறி குழலி ஓங்க, வெண்ணெயூர்ச் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்கவாங்கி,வசிட்டனேபுனைந்தான் மௌலி.

## நளவெண்பா

ஆருயிரின் தாயே! அறத்தின் பெருந்தவமே!
பேரருளின் கண்ணே! பெருமானே!—பாரிடத்தை
யார்காக்கப் போவதுநீ, யாங்கென்றார், தம்கண்ணில்
நீர்வார்த்துக் கால்கழுவா நின்று.

தீக் கானகத்து உறையும் தெய்வங்காள்! வீமன்தன்
கோக் காதலியைக் குறிக்கொள்மின்—நீக்காத
காதல் அன்பு மிக்காளைக் காரிருளில் கைவிட்டுஇன்று
ஏதிலன்போல் போகின்றேன் யான்.

காதலியைக் காரிருளில் கானகத்தே கைவிட்ட
பாதகனைப் பார்க்கப் படாதென்றோ?—நாதம்
அளிக்கின்ற ஆழிவாய் ஆங்கு அலவ! ஓடி
ஒளிக்கின்ற தென்னோ? உரை.

பானலே! சோலைப் பசுந்தென்றல் வந்துலவும்
கானலே! வேலைக் கழிக்குருகே!—யானுடைய
மின்னிமைக்கும் பூணாள் அவ் வீங்கிருள்வாய் ஆங்
என் நினைக்கும்? சொல்வீர் எனக்கு. [குணர்ந்தால்

போவாய், வருவாய், புரண்டு விழுந்து இரங்கி
நாவாய் குழற நடுங்குறுவாய்—தீவாய்
அரவகற்றும் என்போல ஆர்கலியே! மாதை
இரவகற்றி வந்தாய்கொல் இன்று ?

மக்களைமுன் காணு, மனநடுங்கா, வெய்துயிரா,
புக்கெடுத்து வீரப் புயத்தணையா—மக்காள்!நீர்
என்மக்கள் போல்கின்றீர்; யார்மக்கள்? என்றுரைத்
வன்மக் களியானை மன். [தான்

'மன்னன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்
அன்னைதனைக் கான்விட்டு அவன்ஏக—இந்நகர்க்கே
வாழ்கின்றேம், எங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றன்' என்றார் அழுது.

கார்பெற்ற தோகையோ? கண்பெற்ற வாள்முகமோ?
நீர்பெற்று உயர்ந்த நிறைபுலமோ?—பார்பெற்று
மாதோடு மன்னன் வரக்கண்ட மாநகருக்கு
ஏதோ உரைப்பன் எதிர் ?

## வில்லி பாரதம்

ஆவியோ நிலையில் கலங்கியது; யாக்கை
அகத்ததோ புறத்ததோ அறியேன்;
பாவியேன் வேண்டும் பொருள் எலாம் நயக்கும்
பக்குவம் தன்னில்வந் திலையால்;
ஓவிலாது யான்செய் புண்ணியம் அனைத்தும்
உதவினேன்; கொள்கநீ; உனக்குப்
பூவில்வாழ் அயனும் நிகரலன் என்றால்
புண்ணியம் இதனினும் பெரிதோ?

என்னமுன் மொழிந்து கரங்குவித்து இறைஞ்ச,
இறைஞ்சலர்க்கு எழிலி ஏறு அனையான்
கன்னனை உவகைக் கருத்தினால் நோக்கிக்
கைப்புன லுடன்தரு கென்ன,
அன்னவன் இதயத்து அம்பின் வாய்அம்பால்
அளித்தலும் அங்கையால் ஏற்றான்,
முன்னம் ஓர் அவுணன் செங்கை நீர் ஏற்று
மூவுலக மும் உடன் கவர்ந்தோன்.

மல்லலந் தொடையல் நிருபனை, முனிவன்
'மகிழ்ந்துநீ வேண்டிய வரங்கள்
சொல்லுக; உனக்குத் தருதும்' என்று உரைப்ப
சூரன்மா மதலையும் சொல்வான் :
'அல்லல்வெவ் வினையால் இன்னம் உற்பவம்உண்
டாயினும் ஏழெழு பிறப்பும்
இல்லை என்று இரப்போர்க்கு இல்லை என்று உரையா
இதயம்நீ அளித்தருள்' என்றான்.

மைத்துனன் உரைத்த வாய்மைகேட்டு, ஐயன்
மனமலர் உகந்து உகந்து அவனைக்
கைத்தல மலரால் மார்புறத் தழுவி,
கண்மலர்க் கருணைநீர் ஆட்டி,
'எத்தனை பிறவி எடுக்கினும், அவற்றுள்
ஈகையும் செல்வமும் எய்தி,
முத்தியும் பெறுதி முடிவில்' என்று உரைத்தான்
மூவரும் ஒருவனும் மூர்த்தி.

போற்றிய கன்னன் கண்டு கண் களிப்ப,
புணரி மொண்டு எழுந்தகார் முகிலை,
மாற்றிய வடிவும், பஞ்ச ஆயுதமும்,
வயங்கு கைத் தலங்களும் ஆகி,
கூற்று உறழ் கராவின் வாயில்நின்று அழைத்த
குஞ்சர ராசன்முன் அன்று
தோற்றிய படியே தோற்றினன், முடிவும்
தோற்றமும் இலாத பைந் துளவோன்.

# அரிச்சந்திர புராணம்

பாலர்வந் தூரில் புக்கார்; பானுவும் கடலில் புக்கான்;
மாலை வந்து இறுத்த பின்னர் வழியினை நோக்கி, அன்னை
'பாலன் வந்திலன்' என்று ஏங்கி, பரதவித்து இருகண் தாரை
கால, நொந்து உருகி, வாயில்கடைத்தலை வந்து பார்த்தாள்.

வணங்கிய கரத்தாள், சால வாடிய மனத்தாள், 'மக்காள்!
இணங்கி உம்முடனே வந்தஎன்மகன் எங்கே'என்றாள்
'மணம்கமழ் குழலாய்! உன் தன் மைந்தனை அரவு தீண்டி
உணங்கியே இறந்தான்' என்றார்; உயிர்த்திலள், மறுகி வீழ்ந்தாள்.

பாவியேன் மகனே! என்பள்; பதைப்பள், மென்முகத்தில் மோதித்
தாவியே விழுவள்; நின்று தயங்கியே மயங்கி வீழ்வாள்;
காவியங் கண்ணீர் பாயக் கதறுவள்; பதறி ஏங்கி
ஆவியைத் தேடித்தேடி அலமரும் உடலம் ஒத்தாள்.

ஓடினாள்; உள்ளம் எல்லாம் உருகினாள்; கருகி மேனி
வாடினாள்; விறகு வைத்த வடத்தினுக்கு அருகே வந்தாள்;
நாடினாள்; கழுகும் பேயும் நரிகளும் குறளும் துன்றிக்
கூடிய குழுவின் நாப்பண் குமரனைச் சென்று கண்டாள்.



VERSITY EXTENSION LI

'பனியால் நனைந்து, வெயிலால் உலர்ந்து,
பசியால் அலைந்தும் உலவா
அனியாய வெங்கண் அரவால் இறந்த
அதி பாவம் என்கொல் அறியேன்;
தனியே கிடந்து, விடநோய் செறிந்து
தரைமீது உருண்ட மகனே!
இனி யாரைநம்பி உயிர்வாழ்வம், என்தன்
இறையோனும் யானும் அவமே?

'என் நாயகன்தன் மணிமார்பில் ஏறி விளையாடுகின்ற எழிலோய்!
முன்னாய் வளைந்த கனல் மூழ்க எம்மின் முதலே நடந்த மயலாய்
செந்நாய் திரண்டு செறிகான் இருந்து தெளியாது இரங்கும் எனைநீ
'அன்னாய் வருந்தலை' எனாதது உன்தன் அறிவுக்கு அடாது மகனே!

எனமறுகி 'இவனுடன் நாம் இறந்தேம் ஆகில்
இவனை எடுத்துஎரித்து அடக்க உரியார் இல்லை;
மனம் உருகான் நம்மைவிலை கொண்டோன், சால
வன்கண்ணன்; மனைவிஅவன் தனின்மா பாவி;
சினமுடையார்; விடியும் முனர்ச் செல்லேன் ஆகில்
செறுவர், இவன் தனைக்கருக்கிச் செல்வன்', என்று
தனதுதிரு மகனைஎடுத்து அணிதோள் வைத்துத்
தள்ளாடி மதியதனார் தனையை மீண்டாள்.

கண்டனள், ஈது ஈமம்எனக் கருத்தில் உன்னி,
கடவுளர்தம் காவலில்தன் மகனை வைத்து,
பண்டுவெந்து கரிந்தகுறைக் கட்டை எல்லாம்
பலதிசையும் விரைந்து ஓடிப் பார்த்துஎடுத்து,
கொண்டுவந்த பிணங்கள்சுடும் சுடலை நண்ணி,
கொள்ளிஎடுத்து ஓடி, அனல் கூட்டி மூட்டி
மண்டுதழல் கட்டையின்மேல் மகனை வைத்தாள்;
வளர்ந்து எரியும் கனல்விளக்கம் மன்னன் கண்டான்.

அரவுகடித்து அரசிளங்கோ இறந்தான் என்பது
அறியாமல் வெகுண்டு இறைவன்'ஆரே இந்த
இரவுதனில் பிணம் சுடுவார்' அறிவோம், என்று
எழுந்திருந்து விரைந்தோடி, 'ஏடி!மூடி!
தரஉரிய பொருள்எனக்குத் தாராதே நீ
தனியே இப் பனியிருளில் சவம் கொணர்ந்து
கரவின் அழல்சுடுவது உனக்கு அடைவோ?' என்னுக்
கால் வீசிக் கான்முளையை எடுத்து எறிந்தான்.

எறிந்திடலும், உயிரேங்க ஏங்கி, வேனில்
இடிவிழுந்தால் படிமிசையே அடிசாய்ந்து ஆடி
முறிந்துவிழு மரம்போல் சென்று, அடிமேல் வீழ்ந்து,
மொழிகுழறி, விழிஅருவி சொரிய வல்லி
'அறிந்தும்இலன் இவ்வூரில் வழங்கும் நீதி;
அருவினையேன் ஆரும்இலி; அறவும் பாவி;
மறிந்த மகன் தனைச்சுட நான் வந்தேன் ஐயா!
வறியேற்குப் பொருளுளவோ வழங்க' என்றாள்.

'பொருள் உடையேன், தமருடையேன் ஆனால் இந்தப்
புத்திரனைத் தோள்மீது வைத்துப் போந்து.இவ்
இருளிடையில் சுடலையில் வந்து எய்துவேனோ?
எரிந்த குறைக் கட்டையினில் ஏற்றுவேனோ?
தெருள் உடையாய்! அறம் உடையாய்! வினையேன் ஈன்ற
சிறுவனை,யான் சுடக் கருணை செய்யாய்; தேயா
அருள் உடையாய்! ஆதாரம் அற்றேற்கு உன்தன்
அடிஇணையே தஞ்சம்' என அலறி வீழ்ந்தாள்.

பொன் அனையாய்! விடுவிடு; யான் புலையன் என்னில்,
புலையனும் அல்லேன்; புலையற்கு அடிமை கண்டாய்!
என்அடி நீ தீண்டுவது தகாது, நீதான்
இப்பொருட்கு யான் உரியன்அல்லேன், என்னை ஆள்வோன்
சொன்னபணம் கால் உண்டு; கொள்ளி ஆடைத்
துண்டமும் ஒன்று உண்டு;தந்து சுடுதி;அன்பால்
அன்னவன்தான் படியாக எனக்குத் தந்த
வாய்க்கரிசி யான் அளிப்பேன் அறிதி என்றான்.

'துஞ்சிய மைந்தனை எடுத்துச் சுமந்து போந்து,
சுடுவார் அற்று இடுகாட்டில் தோள்மேல் ஏற்றி
பஞ்சிபடும் பாடுபடும் பாவி யேற்குப்
பணம் ஏது? கொள்ளி முறிப் பாதி ஏது?
நெஞ்சுதளர்ந்து அழிவினையேன் வருந்தக் கண்டு
நீ இரங்காய்' என இரந்து நிற்கும் காலை
வஞ்சிதிரு மணிமிடற்றில் வயங்கா நின்ற
மங்கலநாண் கண்டுஇறைவன் மறித்தும் சொல்வான்.

'நல்லை, நல்லை, அறச் சமர்த்தி நீயே கண்டேன்;
நன்னுதலார் அனைவரினும் இந்த்ர சாலம்
வல்லைவல்லை; விறகுகளும் களவே; செம்பொன்
மங்கலநாண் உன்கழுத்தில் இருக்க, ஏதும்
இல்லை எனச் சொல்லுவது சற்றும் ஏலாது;
இதனைஎனக்கு ஈவாய்' என்று இயம்ப, வேடர்
பல்லம் உயர் நிலைவாயில் பட்ட மான்போல்,
பதைபதைத்துப் பைந்தொடியாள் பதறி வீழ்ந்தாள்.

## பிள்ளைத் தமிழ்ப் பாட்டு

பெருந்தேன் இறைக்கும் நறைக் கூந்தல்
　பிடியே! வருக, முழுஞானப்
பெருக்கே! வருக, பிறைமௌலிப்
　பெம்மான் முக்கண் சுடர்க்கிடுநல்
விருந்தே! வருக, மும்முதற்கும்
　வித்தே! வருக, வித்தின்றி
விளைக்கும் பரமா னந்தத்தின்
　விளைவே! வருக, பழமறையின்
குருந்தே! வருக, அருள்பழுத்த
　கொம்பே! வருக, திருக்கடைக்கண்
கொழுத்த கருணைப் பெருவெள்ளம்
　குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்
மருந்தே! வருக, பசுங்குதலை
　மழலைக் கிளியே! வருகவே,
மலயத் துவசன் பெற்றபெரு
　வாழ்வே! வருக வருகவே!

—மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்.

பொய்யா வளமை தரும்பெருமைப்
பொருனைத் துறையில் நீராட்டி,
பூட்டும் கலன்கள் வகைவகையே
பூட்டி எடுத்துப் பாலூட்டி,
மெய்யால் அணைத்து, மறுகுதனில்
விட்டார் அவரை வெருமல் உனே
வெறுக்க வேறு கடனும் உண்டோ ?
விரும்பிப் பரலைக் கொழித்து எடுத்துக்
கையால் இழைத்த சிற்றிலை,நின்
காலால் அழிக்கை கடன் அலகாண்!
காப்பான் அழிக்கத் தொடங்கில் எங்கள்
கவலை எவரோடு இனி உரைப்போம்?
ஐயா! உனது வழி அடிமை
அடியேம் சிற்றில் அழியேலே,
அலைமுத்து எறியும் திருச்செந்தூர்
அரசே! சிற்றில் அழியேலே.

—திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்.

ஒளிரும் உணர்வும் உயிரும் உடலும்
ஒருவும் அறிவும் பெற்று மேல்
உவையும் இவையும் அவையும் எவையும்
உளதும் அலது மற்று நூல்
தெளியும் ஒளியும் இருளும் அனைய
தெருளும் அருளும் அற்றதோர்
தெரிய அரிய பரம உருவு
சிவனும் அயனும் மற்றுமாய்

வெளியின் அளவில் விமல கமல
முகுளம் விரிய மொட்டுரு
விபுல வடிசை முடிவில் சுடரின்
விளைவை அளவி முத்திகூர்
அளியில் மருவு குருகை எமர்கள்
அரசு தருக முத்தமே
அநகன் அதுலன் அமலன் நியம
அறிவின் அருள்க முத்தமே.

—நம்மாழ்வார் பிள்ளைத் தமிழ்.

ஒப்பரிய தொண்டர்தம் அருமையும் பெருமையும்
உவக்கும் அவரவர் செய்கையும்
உவமை இல்லாச் செய்கை நுட்பமும் திட்பமும்
உம்பர்கோன் அருள் தட்பமும்
தப்பரிய செந்தமிழ்த் தொடைநடையும் அடையும்
தவாப்பொருள் அணிச் சிறப்பும்
தமிழ்மறை அடங்கு பல மந்தணமும் வெள்ளிடைத்
தவிரும் வெற்பென விளங்க
வெப்பரிய முழுமதிக் குடைநிழற்று அநபாயன்
மேய அவை அகம் நயந்து
வியந்து மெய்ப்பாட்டிஞெடு பாராட்டி மகிழமேல்
மேல்விரித்து அருளிய பிரான்
செப்பரிய குன்றையம் பதி அருள்மொழித்தேவ!
செங்கீரை ஆடியருளே
திருத்தொண்டை நன்ஞட்டு வேளாளர் குலதிலக!
செங்கீரை ஆடியருளே.

—சேக்கிழார் பிள்ளைத் தமிழ்

## தாயுமானவர் பாடல்

அங்கிங்கு எனாதபடி, எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தி யாகி
அருளொடு நிறைந்ததெது? தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடி எல்லாம்
தங்கும்படிக்கு இச்சை வைத்து உயிர்க்கு உயிராய்த்
தழைத்தது எது ? மனவாக்கினில்
தட்டாமல் நின்றது எது? சமய கோடிகள் எலாம்
தம் தெய்வம் எம் தெய்வம் என்று
எங்கும் தொடர்ந்து எதிர்வழக்கிடவும் நின்றதுஎது?
எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்ல ஒரு சித்தாகி இன்பமாய்
என்றைக்கும் உள்ளது எது ? மேல்
கங்குல் பகல் அற நின்ற எல்லையுளது எது ? அது
கருத்திற்கு இசைந்தது அதுவே
கண்டன எலாம் மோன உரு வெளியதாகவும்
கருதி அஞ்சலி செய்குவாம்.

கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம்,
கரடி வெம்புலி வாயையும்
கட்டலாம், ஒரு சிங்க முதுகின்மேல் கொள்ளலாம்,
கட்செவி எடுத்து ஆட்டலாம்,
வெந்தழலின் இரதம்வைத்து,ஐந்து லோகத்தையும்
வேதித்து விற்று உண்ணலாம்,
வேருெருவர் காணுமல் உலகத் துலாவலாம்,
விண்ணவரை ஏவல் கொளலாம்,
சந்ததமும் இளமையொடு இருக்கலாம், மற்ருெரு
சரீரத்தினும் புகுதலாம்,
சலமேல் நடக்கலாம், கனல்மேல் இருக்கலாம்,
தன்னிகரில் சித்தி பெறலாம்,
சிந்தையைஅடக்கியே சும்மா இருக்கின்ற
திறமரிது, சத்தாகி என்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே!
தேசோமயானந்தமே!

அன்பர்பணி செய்யஎன்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே!

சினம்இறக்கக் கற்ருலும், சித்தியெலாம் பெற்ருலும்
மனம் இறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே!

எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேருென்று அறியேன் பராபரமே!

காட்டும் திருவருளே கண்ணுகக் கண்டுபர
வீட்டின்ப மெய்ப்பொருளை மேவும்நாள் எந்நாளோ?

## திருஅருட்பா

நீருண்டு, பொழிகின்ற காருண்டு, விளைகின்ற
நிலனுண்டு, பலனும் உண்டு,
நிதியுண்டு, துதியுண்டு, மதியுண்டு, கதிகொண்ட
நெறியுண்டு, நிலையு முண்டு,
ஊருண்டு, பேருண்டு, மணியுண்டு, பணியுண்டு,
உடையுண்டு, கொடையும் உண்டு,
உண்டுண்டு மகிழவே உணவுண்டு, சாந்தமுறும்
உளமுண்டு, வளமும் உண்டு,
தேருண்டு, கரிஉண்டு, பரிஉண்டு, மற்றுள்ள
செல்வங்கள் யாவும் உண்டு,
தேனுண்டு வண்டுறு கடம்பணியும் நின்பதத்
தியானம் உண்டாயில் அரசே!
தாருண்ட சென்னையில் கந்தகோட்டத்துள் வளர்
தலமோங்கு கந்தவேளே!
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே.

வாழையடி வாழையென வந்ததிருக் கூட்ட
மரபினில்யான் ஒருவன்அன்றோ? வகையறியேன்? இந்த
ஏழைபடும் பாடுனக்குத் திருவுளச் சம்மதமோ?
இதுதகுமோ? இதுமுறையோ? இதுதருமம் தானோ
மாழைமணிப் பொதுநடம்செய் வள்ளால்! யான் உனக்கு
மகனலனோ! நீஎனக்கு வாய்த்ததந்தை யலையோ?
கோழையுல குயிர்த்துயரம் இனிப்பொறுக்க மாட்டேன்
கொடுத்தருள்நின் அருளொளியைக் கொடுத்தருள்
[இப்பொழுதே.

காடுவெட்டி, நிலம்திருத்தி, காட்டெருவும் போட்டு
கரும்பைவிட்டு, கடுவிரைத்து, களிக்கின்ற உலகீர்!
கூடுவிட்டுப் போயினபின் எதுபுரிவீர்? எங்கே
குடியிருப்பீர்? ஐயோ,நீர் குறித்தறியீர் இங்கே
பாடுபட்டீர், பயனறியீர், பாழ்க்கிறைத்துக் கழித்தீர்
பட்டதெல்லாம் போதும்,இது பரமர்வரு தருணம்
ஈடுகட்டி வருவீரேல் இன்பமிகப் பெறுவீர்
எண்மையுரைத் தேனலநான் உண்மைஉரைத்தனனே.

விளக்கறியா இருட்டறையில் கவிழ்ந்துகிடந் தழுது
விம்முகின்ற குழவியினும் மிகப்பெரிதும் சிறியேன்
அளக்கறியாத் துயர்க்கடலில் விழுந்துநெடுங் காலம்
அலைந்தலைந்து மெலிந்ததுரும் பதனில்மிகத் துரும்பேன்
கிளக்கறியாக் கொடுமையெலாம் கிளைத்தபழு மரத்தேன்
கெடுமதியேன், கடுமையினேன், கிறிபேசும் வெறியேன்
களக்கறியாப் புவியிடைநான் ஏன்பிறந்தேன் அந்தோ!
கருணைநடத் தரசேநின் கருத்தைஅறி யேனே.

வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
   வாடினேன், பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறாது அயர்ந்த
   வெற்றரைக் கண்டுஉளம் பதைத்தேன்,
நீடிய பிணியால் வருந்துகின் றோர்என்
   நேருறக் கண்டுளம் துடித்தேன்
ஈடில்மா னிகளாய், ஏழைக ளாய்நெஞ்சு
   இளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்.

## குறத்திப் பாட்டு

திங்கள்முடி சூடுமலை, தென்றல்விளை யாடுமலை
தங்குபுயல் சூழுமலை, தமிழ்முனிவன் வாழுமலை
அங்கயற்கண் அம்மைதிரு அருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை, பொதியமலை என்மலையே.

—மீனாட்சியம்மை குறம்

புல்வாயின் பார்வையைவெம் புலிப்பார்வை இணங்கும்
புதுத்தினைகல் உரல்பாறை முன்றில்தொறும் உணங்கும்
கல்விடரில் வரிவேங்கை கடமானோ டுறங்கும்
கருமலையில் வெள்ளருவி கறங்கிவழிந் திறங்கும்
சில்வலையும் பல்வாரும் முன்இறப்பில் தூங்கும்
சிறுதுடியும் பெருமுரசும் திசைதொறும்நின் றேங்கும்
கொல்லையில்மான் பிணையும்இளம் பிடியும்விளை யாடும்
குறிச்சிஎங்கள் குறச்சாதி குடியிருப்பது அம்மே.

—மீனாட்சியம்மை குறம்

கொல்லிமலை எனக்கிளைய செல்லிமலை அம்மே
 கொழுநனுக்குக் காணிமலை பழனிமலை அம்மே

எல்லுலவும் விந்தைமலை எந்தைமலை அம்மே
 இமயமலை என்னுடைய தமையன்மலை அம்மே

சொல்லரிய சாமிமலை மாமிமலை அம்மே
 தோழிமலை நாஞ்சிநாட்டு வேள்விமலை அம்மே

செல்லினங்கள் முழவுகொட்ட மயிலினங்கள் ஆடும்
 திரிகூட மலையெங்கள் செல்வமலை அம்மே.

—குற்றாலக் குறவஞ்சி

ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்
 ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்
வாடக் காண்பது மின்னார் மருங்கு
 வருந்தக் காண்பது சூலுளை சங்கு
போடக் காண்பது பூமியில் வித்து
 புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து
தேடக் காண்பது நல்லறம் கீர்த்தி
 திருக்குற் றாலர்தென் னாரிய நாடே

—குற்றாலக் குறவஞ்சி

## குறத்தி வாசல்வளம் கூறுதல்

வாசலிது வாசலிது மகராசன் வாசலிது
தேசுறு போசல குலத்தைச் செழிக்கவைக்கும் வாசலிது.

(வாசலிது)

நன்னயம்சேர் தஞ்சைதனில் நலம்பெருகும் வாசலிது
மன்னு சரபோஜி மன்னர்மகிழ்ந்திருக்கும் வாசலிது.

(வாசலிது)

திருமகளும் நாமகளும் சிறந்திருக்கும் வாசலிது
வரம்உதவும் பெரியோர்கள் வாழ்த்திசைக்கும் வாசலிது.

(வாசலிது)

இத்தரணி மன்னர் எல்லாம் இறைஞ்சி நிற்கும் வாசலிது
மொய்த்திடுசீர் மும்முரசும் முழங்குமணி வாசலிது.

(வாசலிது)

# குறத்தி தான் பெற்ற வரிசைகளைக் கூறுதல்

பல்லவி

சொன்ன குறிகளும் பெற்ற வரிசையும்
சொல்லுகிறேனடி கண்ணே!

அநுபல்லவி

கொங்கு தேசமுதல் எங்கும் ஏகிமுன்
குறி உரைத்தனன் அங்கே
கோதைமார் மனம் மகிழ்ந்து மாநிதி
குலவு நற்றுகில் ஈந்தார்.

சரணங்கள்

தண் மலர்ப் புனல் அகழி சூழ்ந்திடும்
தஞ்சையாம் இது தன்னில்
தாமரைத் திருக்கோயில் மேவிய
தையல் போல் வளர் மின்னே!

நண்ணிடங்கொரு தெலுங்க மானினி
'நாசெய் சூடெ'னச் சொன்னாள்
நாடி நற்குறி ஓதினேன் இந்த
நாசிகாபரணம் ஈந்தாள்.

கண்ணி இங்கொரு கன்னடப் பெண் 'நன
கையினநோடே' என்றாள்
கருதவட்கிசை குறிதனக்குஅவள்
காதிேனலை அளித்தாள்.

(சொன்ன)

—சரபேந்திர குறவஞ்சி.

# தெய்வத் தமிழ் மாலை

சீர்கெழு செந்திலும், செங்கோடும், வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்கை வேலன்றே!
பாரிரும் பௌவத்தின் உள்புக்குப் பண்டொருநாள்
சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே.

அணிமுகங்கள் ஓராறும், ஈராறு கையும்,
இணையின்றித் தானுடையான் ஏந்திய வேலன்றே!
பிணிமுகமேல் கொண்டு அவுணர் பீடழியும் வண்ணம்
மணி விசும்பிற் கோனேத்த மாறட்ட வெள்வேலே.

—சிலப்பதிகாரம்.

மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன், முத்தமிழால்
வைதாரையும் அங்கு வாழவைப்போன், வெய்ய வாரணம்போல்
கைதான் இருபதுடையான் தலைபத்தும் கத்தரிக்க
எய்தான் முருகன், உமையாள் பயந்த இலஞ்சியமே!

நாள் என்செயும்? வினைதான் என்செய்யும்? எனை நாடிவந்த
கோள் என்செயும்? கொடுங் கூற்றென்செயும்? குமரேசர் இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன்னே வந்து தோன்றிடினே.

—கந்தர் அலங்காரம்.

செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன், பிறவான் இறவான் ;
சும்மாஇரு சொல்அற என்றலுமே,
அம்மா! பொருள் ஒன்றும் அறிந்திலனே!

—கந்தர் அநுபூதி-

ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே
குன்று உருவ வேல்வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறு படு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே
ஆறு முகம் ஆன பொருள் நீஅருளல் வேண்டும்
ஆதி அருணசலம் அமர்ந்த பெருமாளே!

இருந்த வீடும் கொஞ்சிய சிறுவரும் உறுகேளும்
இசைந்த ஊரும் பெண்டிரும் இளமையும் வளமேவும்
விரிந்த நாடும் குன்றமும் நிலை என மகிழாதே,
விளங்கு தீபம் கொண்டுனை வழிபட அருள்வாயே ;
குருந்தில் ஏறும் கொண்டலின் மருக! பொன் வயலூரா!
குரங்கு உலாவும் குன்றுறை குறமகள் மணவாளா !
திருந்த வேதம் தண்தமிழ் தெரிதரு புலவோனே!
சிவந்த காலும் தண்டையும் அழகிய பெருமாளே!

—திருப்புகழ்-

தேறும் தயையின் முனிவோய் நீ;
சினத்திற்கு அருள்செய் கனிவோய் நீ;
கூறும் கலையுற் றுணர்வோய் நீ;
கூறும் தொனியற்றுரைப் போய் நீ;
மாறும் பொருள் யாவினும் நின்றே
மாறா நிலைகொள் மரபோய் நீ;
ஈறும் தவிர்ந்துன் புகழ்க் கடலாழ்ந்து
எனக்கே கரைகாட் டருளாயோ?

—தேம்பாவணி

சிறந்த மெய்ப் பொருளை, அழிவிலா மணியை,
தெரிந்து முக்காலமும் உணர்ந்து
துறந்தவர் இதயாசனத் திருந் தவனை
தொடர் இன்ப துன்பம் அற்றவனை,
பிறந்த பல் உயிரின் மனத்தளவு உறைந்து
பிறப்பு இறப்பு என்றிலா தவனை
மறந்தவர், சுவர்க்கப் பதியையும் மறந்து,
மண்ணினில் மதிமறந் தவரே.

—சீறுப்புராணம்.

தன்னரிய திருமேனி சதைப்புண்டு, தவிப்பெய்தி,
பன்னரிய பலபாடு படும்போதும், பரிந்து 'எந்தாய்!
இன்னதென அறிகில்லார் தாம் செய்வது, இவர்பிழையை
மன்னியும்' என்று எழிற்கனிவாய் மலர்ந்தார், நம் அருள்வள்ளல்.

வானமும் பூமியும் மகிழ்கொண் டோங்கிட
ஞானமும் நன்மையும் நனி சிறந்திட
ஊனமும் பாவமும் ஒழியத் தோன்றிய
தீனரட்சகன் பதம் சிந்தித் தேத்துவாம்.

—இரட்சணிய யாத்திரிகம்.

# தமிழகப் புகழ்மாலை

## தமிழ்நாடு

வேழம் உடைத்து மலைநாடு; மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து; தெண்ணீர் வயல்தொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து.

## தொண்டைநாடு

பாலாறு வளம்சுரந்து நல்க, மல்கும்
பாளை விரி மணம் கமழ் பூஞ்சோலை தோறும்
காலாறு கோலி இசை பாட நீடும்
களிமயில் நின்று ஆடும்இயல் தொண்டை நாட்டுள்
நாலாறு கோட்டத்துப் புலியூர்க் கோட்டம்,
நன்றிபுனை குன்றை வளநாட்டு மிக்க
சேலாறுகின்ற வயல் குன்றத்தூரில்
சேக்கிழார் திருமரபு சிறந்தது அன்றே.

## காஞ்சிபுரம்

ஏரி இரண்டும் சிறகா,எயில்வயிரு
காருடைய பீலி கடிகாவா—சீரிய
அத்தியூர் வாயா, அணிமயிலே போன்றதே
பொன்தேரான் கச்சிப் பொலிவு.

## மதுரை

ஆடல் புரியும் அரன் என்றும், மூவர் தமிழ்ப்
பாடல் புரியும் பரன்என்றும்—கூடலிலே
நன்னரி வாசிக்கு நடை பயிற்றினேன் என்றும்
கின்னரி வாசிக்கும் கிளி.

## பூம்புகார்

காலை அரும்பி மலரும் கதிரவனும்
மாலை மதியமும்போல் வாழியரோ—வேலை
அகழால் அமைந்த அவனிக்கு மேலைப்
புகழால் அமைந்தபுகார்.

—சிலப்பதிகாரம்.

காதலர் ஆகி, கழிக்கானல் கையுறை கொண்டு எம்பின் வந்தார்
ஏதிலர் தாமாகி யாமிரப்ப, நிற்பதை யாங்கு அறிகோம் ஐய ?
மாதரார் கண்ணும், மதிநிழல் நீரிணை கொண்டு மலர்ந்த நீலப்
போதும் அறியாது வண்டு ஊசலாடும் புகாரே, எம்மூர்.

—சிலப்பதிகாரம்.

சென்னி வெண்குடை நீடநபாயன்திருக்குலம் புகழ் பெருக்கிய சிறப்பின்
மன்னு தொல்புகழ் மருதநீர் நாட்டு வயல் வளம்தர இயல்பினில் அளித்து,
பொன்னி நன்னதி மிக்க நீர்பாய்ந்து, புணரி தன்னையும் புனிதம் ஆக்குவதோர்
நன்னெடும் பெருந்தீர்த்த முன்னுடைய நலம் சிறந்தது வளம்புகார் நகரம்.

—பெரியபுராணம்.

## ஆழ்வார் திருநகரி

இதுவோ திருநகரி! ஈதோ பொருநல்!
இதுவோ பரமபதத்து எல்லை!—இதுவோதான்
வேதம் தமிழ்செய்து மெய்ப்பொருட்கும் உட்பொருளாய்
ஓதும் சடகோபன் ஊர்.

## ஸ்ரீ வில்லிபுத்தூர்

கோதை பிறந்தஊர், கோவிந்தன் வாழும் ஊர்,
சோதி மணிமாடம் தோன்றும் ஊர்—நீதியால்
நல்ல பத்தர் வாழும் ஊர், நான்மறைகள் ஓதும்ஊர்
வில்லிபுத்தூர் வேதக்கோன் ஊர்.

## புரவலர் புகழ் மாலை

வாணன் புகழ்க்கெல்லை வாழ்த்துவோர் நாவெல்லை
வாணன் புகழ்க்கெல்லை மண்ணெல்லை—வாணன்
படைக்கெல்லை திக்கெல்லை, பைந்தமிழ்தேர் வாணன்
கொடைக்கெல்லை ஏற்பவர்தம் கோள்.

வாணன் புகழ்எழுதா மார்புண்டோ? மாகதர்கோன்
வாணன் புகழ்உரையா வாயுண்டோ?—வாணன்
கொடிதாங்கி நில்லாத கொம்புண்டோ? உண்டோ
அடிதாங்கி நில்லா அரசு?

பேரரசர் தேவிமார் பெற்ற மதலையர்தம்
மார்பகலம் கண்டு மகிழ்வரே—போர்புரிய
வல்லான், அகளங்கன், வாணன் திருநாமம்
எல்லாம் எழுதலாம் என்று.

காலையில்ஒன் றுவர், கடும்பகலில் ஒன்றுவர்
மாலையில்ஒன் றுவர், மனிதரெலாம்—சாலவே
முல்லானைப் போல முகமும் அக முமலர்ந்த
நல்லானைக் கண்டறியோம் நாம்.

நிழலருமை வெய்யிலிலே நின்றுஅறிமின்; ஈசன்
கழலருமை வெவ்வினையில் காண்மின்—பழகுதமிழ்ச்
சொல்லருமை நாலிரண்டில், சோமன் கொடையருமை
புல்லரிடத் தேஅறிமின் போய்.

பூங்கமல வாவிசூழ் புள்வேளூர்ப் பூதனையும்
ஆங்குவரு பாற்பெண்ணை ஆற்றினையும்—ஈங்கு
மறப்பித்தாய் வாளதிகா! வன்கூற்றை நாவை
அறுப்பித்தாய் ஆமலகம் தந்து.

நீளத் திரிந்துஉழன்றாய்; நீங்கா நிழல்போல
நாளைக்கு இருப்பாயோ நல்குரவே?—காளத்தி
நின்றைக்கே சென்றக்கால் நீயெங்கே, நானெங்கே
இன்றைக்கே சற்றே இரு.

இரவுநன்பகல் ஆகில்என்,பகல் இருளறுஇரவாகில்என்
இரவிஎன் திசைமாறிலென், கடல்ஏழும்ஏறில் என்,வற்றில்என்
மரபுதங்கிய முறைமைபேணிய மன்னர்போகில்என், ஆகில்என்
வளமைஇன்புறு சோழமண்டல வாழ்க்கைகாரணம் ஆகவே
கருதுசெம்பொன்னின் அம்பலத்திலோர் கடவுள்நின்று நடிக்குமே
காவிரித்திரு நதியிலேஒரு கருணைமாமுகில் துயிலுமே
தருஉயர்ந்திடு புதுவையம்பதி தங்குமானிய சேகரன்
சங்கரன்தரு சடையன்என்றொரு தருமதேவதை வாழவே!

காவிரியை, சோணாட்டை, காராளர் தம்மரபை
நாவலரைக் காவலரை நல்லோரை—பூவலயம்
உள்ளத் தகும்புதுவை ஊரைச் சிறப்பித்தான்
பிள்ளைப் பெருமாள் பிறந்து.

பூமாது இருந்தென், புவிமாது இருந்தென்இப் பூதலத்தில்
நாமாது இருந்தென்ன, நாமிருந் தென்ன,நன் ஞவலர்க்குக்
கோமான், அழகமர் மால்சீதக் காதி கொடைமிகுந்த
சீமான் இறந்திட்ட போதே புலமையும் செத்ததுவே.

இடுவார் சிலரும் இடாதார் பலரும்
வடுவிலா வையத் திருப்ப—படுபாவி
கூவத்து நாரணனைக் கொன்ருயே! கற்பகப்பூம்
காவெட்ட லாமோ கறிக்கு.

—தனிப்பாடல்கள்

# பாரதி பாடல்

## வந்தே மாதரம்

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே—அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே—அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே—இதை
வந்தனைகூறி மனத்தில் இருத்தி, என்
வாயுற வாழ்த்தேனோ?—இதை
'வந்தே மாதரம், வந்தே மாதரம்'
என்று வணங் கேனோ ?

## பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி

பொழுது புலர்ந்தது; யாம்செய்த தவத்தால்,
புன்மை இருட்கணம் போயின யாவும்;
எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி
எழுந்து விளங்கியது அறிவெனும் இரவி;
தொழுதுனை வாழ்த்தி வணங்குதற்கு இங்குஉன்
தொண்டர் பல்லாயிரர் சூழ்ந்து நிற்கின்றோம்;
விழிதுயில் கின்றனை இன்னும்எம் தாயே!
வியப்பிது காண்! பள்ளி யெழுந்தருளாயே!

## செந்தமிழ் நாடு

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே. (செந்தமிழ்)

காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருனை நதி—என
மேவிய யாறு பலவோடத்—திரு
மேனி செழித்த தமிழ்நாடு. (செந்தமிழ்)

நீலத் திரைக்கட லோரத்திலே—நின்று
நித்தம் தவஞ்செய் குமரிஎல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு. (செந்தமிழ்)

கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின்—மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு. (செந்தமிழ்)

வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்றோர்—மணி
யாரம் படைத்த தமிழ்நாடு. (செந்தமிழ்)

# தமிழ்

யாமறிந்த மொழிகளிலே
தமிழ்மொழிபோல் இனிதாவது
எங்கும் காணோம்;
பாமரராய், விலங்குகளாய்,
உலகனைத்தும் இகழ்ச்சிசொலப்
பான்மை கெட்டு,
நாமமது தமிழரெனக்
கொண்டு இங்கு வாழ்ந்திடுதல்
நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை
உலகமெலாம் பரவும்வகை
செய்தல் வேண்டும்.

யாமறிந்த புலவரிலே
கம்பனைப்போல், வள்ளுவர்போல்
இளங்கோவைப் போல்,
பூமிதனில் யாங்கணுமே
பிறந்ததில்லை, உண்மை, வெறும்
புகழ்ச்சி யில்லை;
ஊமையாராய்ச் செவிடர்களாய்க்
குருடர்களாய் வாழ்கின்றோம்;
ஒருசொல் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில்
தெருவெல்லாம் தமிழ்முழக்கம்
செழிக்கச் செய்வீர்!

பிறநாட்டு நல்லறிஞர்
சாத்திரங்கள் தமிழ்மொழியில்
பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய
புதுநூல்கள் தமிழ்மொழியில்
இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே
பழங்கதைகள் சொல்வதிலோர்
மகிமை இல்லை;
திறமான புலமை எனில்
வெளிநாட்டோர் அதைவணக்கம்
செய்தல் வேண்டும்.

## வாழிய செந்தமிழ்

வாழிய செந்தமிழ்! வாழ்கநற் றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மைவந் தெய்துக! தீதெலாம் நலிக!
அறம்வளர்ந் திடுக! மறம் மடிவுறுக!
ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக!
நந்தே யத்தினர் நாடொறும் உயர்க!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!

## விடுதலை

விடுதலை! விடுதலை! விடுதலை!

பறைய ருக்கும் இங்கு தீயர்
புலையருக்கும் விடுதலை;
பரவ ரோடு குறவ ருக்கும்
மறவ ருக்கும் விடுதலை;
திறமை கொண்ட தீமை யற்ற
தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானம் எய்தி
வாழ்வம் இந்த நாட்டிலே. (விடுதலை)

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்;
வைய வாழ்வு தன்னில் எந்த
வகையினும் நமக்குளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
வாழ்வம் இந்த நாட்டிலே. (விடுதலை)

## சுதந்திரப் பள்ளு

பல்லவி

ஆடுவோமே—பள்ளுப்
பாடு வோமே;
ஆனந்த சுதந்திரம்
அடைந்துவிட் டோமென்று. (ஆடுவோமே)

சரணங்கள்

எங்கும் சுதந்திரம்
என்பதே பேச்சு—நாம்
எல்லோரும் சமமென்பது
உறுதி யாச்சு;
சங்குகொண்டே வெற்றி
ஊதுவோமே—இதைத்
தரணிக்கெல் லாமெடுத்து
ஓது வோமே. (ஆடுவோமே)

எல்லோரும் ஒன்றென்னும்
காலம் வந்ததே—பொய்யும்
ஏமாற்றும் தொலைகின்ற
காலம் வந்ததே—இனி
நல்லோர் பெரியரென்னும்
காலம் வந்ததே—கெட்ட
நயவஞ்சக் காரருக்கு
நாசம் வந்ததே. (ஆடுவோமே)

உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்—வீணில்
உண்டுகளித் திருப்போரை
நிந்தனை செய்வோம்;
விழலுக்கு நீர்பாய்ச்சி
மாய மாட்டோம்—வெறும்
வீணருக்கு உழைத்துடலம்
ஓயமாட்டோம்.

## மஹாத்மா காந்தி பஞ்சகம்

வாழ்கநீ ! எம்மான், இந்த
வையத்து நாட்டில் எல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டு,
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மஹாத்மா ! நீ வாழ்க ! வாழ்க!

# கரும்புத் தோட்டத்திலே

பல்லவி

கரும்புத் தோட்டத்திலே—ஆ
கரும்புத் தோட்டத்திலே

சரணங்கள்

கரும்புத் தோட்டத்திலே—அவர்
கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி
வருந்து கின்றனரே!—ஹிந்து
மாதர்தம் நெஞ்சு கொதித்துக் கொதித்துமெய்
சுருங்கு கின்றனரே!—அவர்
துன்பத்தை நீக்க வழியில்லை யோ?ஒரு
மருந்திதற் கிலையோ?—செக்கு
மாடுகள் போலுழைத் தேங்குகின்றார், அந்தக்
(கரும்புத் தோட்டத்திலே)

நாட்டை நினைப்பாரோ?—எந்த
நாளினிப் போயதைக் காண்பதென்றே அன்னை
வீட்டை நினைப்பாரோ?—அவர்
விம்மிவிம்மி விம்மி விம்மியழுங்குரல்
கேட்டிருப்பாய் காற்றே—துன்பக்
கேணியிலே எங்கள் பெண்கள் அழுதசொல்
மீட்டு முரையாயோ?—அவர்
விம்மி அழவுந் திறங்கெட்டுப் போயினர்
(கரும்புத் தோட்டத்திலே)

## கிளிவிடு தூது

பல்லவி

சொல்ல வல்லாயோ ?—கிளியே
சொல்லநீ வல்லாயோ ?

சரணங்கள்

அல்லிக் குளத்தருகே—ஒருநாள்
அந்திப் பொழுதினிலே—அங்கொர்
முல்லைச் செடியதன்பால்—செய்த வினை
முற்றும் மறந்திடக் கற்றதென் னேயென்று
(சொல்ல)

பாலை வனத்திடையே—தனைக் கைப்
பற்றி நடக்கையிலே—தன் கை
வேலின் மிசையாணை—வைத்துச் சொன்ன
விந்தை மொழிகளைச் சிந்தைசெய் வாயென்று
(சொல்ல)

## நந்த லாலா

காக்கைச் சிறகினிலே
நந்த லாலா ! — நின்தன்
கரியநிறந் தோன்று தையே,
நந்த லாலா !
பார்க்கும் மரங்க ளெல்லாம்
நந்த லாலா ! — நின்தன்
பச்சைநிறந் தோன்று தையே,
நந்த லாலா !

கேட்கும் ஒலியி லெல்லாம்
நந்த லாலா !—நின்தன்
கீதம் இசைக்குதடா
நந்த லாலா !

தீக்குள் விரலை வைத்தால்
நந்த லாலா !—நின்னைத்
தீண்டு மின்பந் தோன்றுதடா
நந்த லாலா !

## வெள்ளைத் தாமரை

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்;
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள் ;
கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்;
உள்ள தாம்பொருள் தேடி உணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள் நின் றொளிர்வாள்;
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொரு ளாவாள்.

(வெள்ளைத்)

மாதர்தீங்குரல் பாட்டில் இருப்பாள்;
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள் ;
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடம் கொண்டாள்;

கோத கன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம், கோபுரம், கோயில்
ஈத னைத்தின் எழிலிடை யுற்ருள் ;
இன்ப மேவடி வாகிடப் பெற்ருள்.

(வெள்ளைத்)

செந்த மிழ்மணி நாட்டிடை யுள்ளீர் !
சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்
வந்த னம்இவட் கேசெய்வ தென்ருல்
வாழி யஃதிங் கெளிதன்று கண்டீர் !
மந்தி ரத்தை முணுமுணுத்து ஏட்டை
வரிசை யாக அடுக்கி, அதன்மேல்
சந்த னத்தை, மலரை இடுவோர்
சாத்தி ரம்இவள் பூசனை யன்ரும்.

(வெள்ளைத்)

வீடு தோறும் கலையின் விளக்கம்,
வீதி தோறும் இரண்டொரு பள்ளி;
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்க ளெங்கும் பலபல பள்ளி;
தேடு கல்வியி லாததொர் ஊரைத்
தீயி னுக்கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர்.

(வெள்ளைத்)

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்;
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்;
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்;
பின்னர் உள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கியொளிர நிறுத்தல்;
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்.

(வெள்ளைத்)

நிதிமி குந்தவர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவும் அற்றவர் வாய்ச்சொல் அருளீர்!
ஆண்மை யாளர் உழைப்பினை நல்கீர்!
மதுரத் தேமொழி மாதர்க ளெல்லாம்
வாணி பூசைக் குரியன பேசீர்!
எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்
இப்பெருந் தொழில் நாட்டுவம் வாரீர்!

(வெள்ளைத்)

# அச்சமில்லை

அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.

இச்சகத்து ளோரெலாம்
எதிர்த்து நின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.

துச்சமாக எண்ணி நம்மைத்
தூறு செய்த போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.

பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கை
பெற்று விட்ட போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.

இச்சை கொண்ட பொருளெலாம்
இழந்து விட்ட போதினும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே

நச்சை வாயி லேகொணர்ந்து
நண்பர் ஊட்டு போதினும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.

உச்சிமீது வானிடிந்து
வீழுகின்ற போதினும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.

## பாப்பாப் பாட்டு

ஓடிவிளையாடு பாப்பா !—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா !
கூடி விளையாடு பாப்பா !—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா !

சின்னஞ் சிறுகுருவி போலே—நீ
திரிந்து பறந்து வா பாப்பா !
வண்ணப் பறவைகளைக் கண்டு—நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா !

பாலைப் பொழிந்துதரும், பாப்பா !—அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா !
வாலைக் குழைத்துவரும் நாய்தான்—அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா !

வண்டி இழுக்கும் நல்ல குதிரை,—நெல்லு
வயலில் உழுது வரும் மாடு;
அண்டிப் பிழைக்கும் நம்மை, ஆடு.—இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா!

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா!
அமிழ்தில் இனியதடி பாப்பா!—நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா!

சாதிகள் இல்லையடி பாப்பா!—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்;
நீதி, உயர்ந்த மதி, கல்வி,—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

உயிர்க ளிடத்தில் அன்பு வேணும்;—தெய்வம்
உண்மை யென்று தானறிதல் வேணும்;
வயிர முடைய நெஞ்சு வேணும்;—இது
வாழும் முறைமையடி பாப்பா!

# பெண்கள் விடுதலைக் கும்மி

கும்மி யடி ! தமிழ் நாடு முழுதும்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி !
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோமென்று கும்மியடி ! (கும்மி)

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார் ;
வீட்டுக் குள்ளேபெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார். (கும்மி)

மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே,
வீட்டினில் எம்மிடம் காட்ட வந்தார், அதை
வெட்டிவிட் டோமென்று கும்மியடி ! (கும்மி)

கற்பு நிலையென்று சொல்ல வந்தார், இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்;
வற்புறுத் திப்பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம். (கும்மி)

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் ;
எட்டும் அறிவினில் ஆணுக் கிங்கேபெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி ! (கும்மி)

# கனவு

## ஆங்கிலப் பயிற்சி

கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்,
காளி தாசன் கவிதை புனைந்ததும்,
உம்பர் வானத்துக் கோளையும் மீனையும்
ஓர்ந்த ளந்ததோர் பாஸ்கரன் மாட்சியும்,
நம்ப ருந்திற லோடொரு பாணினி
ஞால மீதில் இலக்கணம் கண்டதும்,
இம்பர் வாழ்வின் இறுதிகண் டுண்மையின்
இயல்பு ணர்த்திய சங்கரன் ஏற்றமும்,

சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்,
தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்,
பாரில் நல்லிசைப் பாண்டிய சோழர்கள்
பார ளித்ததும், தர்மம் வளர்த்ததும்,
பேர ருட்சுடர் வாள்கொண்டு அசோகனூர்
பிழைப டாது புவித்தலம் காத்ததும்
வீரர் வாழ்த்த மிலேச்சர்தந் தீயகோல்
வீழ்த்தி வென்ற சிவாஜியின் வெற்றியும்,

அன்ன யாவும் அறிந்திலர் பாரதத்
தாங்கி லம்பயில் பள்ளியுட் போகுநர்;
முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டி ருக்குமிந் நாளின் இகழ்ச்சியும்

பின்னர் நாடுறு பெற்றியும் தேர்கிலார்
பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்கள்;
என்ன கூறிமற் றெங்கன் உணர்த்துவேன்
இங்கி வர்க்கென துள்ளம் எரிவதே!

## கண்ணம்மா—என் குழந்தை

சின்னஞ் சிறு கிளியே,—கண்ணம்மா!
செல்வக் களஞ்சியமே!
என்னைக் கலிதீர்த்தே—உலகில்
ஏற்றம் புரிய வந்தாய்!

பிள்ளைக் கனியமுதே,—கண்ணம்மா!
பேசும்பொற் சித்திரமே!
அள்ளி யணைத்திடவே—என் முன்னே
ஆடி வரும் தேனே!

ஓடி வருகையிலே,—கண்ணம்மா!
உள்ளம் குளிரு தடீ!
ஆடித்திரிதல் கண்டால்—உன்னைப்போய்
ஆவி தழுவு தடீ!

கன்னத்தில் முத்தமிட்டால்—உள்ளந்தான்
கள்வெறி கொள்ளு தடீ!
உன்னைத் தழுவிடிலோ,—கண்ணம்மா!
உன்மத்த மாகு தடீ!

## கண்ணம்மா—என் காதலி

வீணையடி நீ யெனக்கு
மேவும் விரல் நானுனக்கு;
பூணும் வடம் நீ யெனக்கு,
புது வயிரம் நானுனக்கு;
காணுமிடந் தோறு நின்றன்
கண்ணி னொளி வீசுதடீ!
மாணுடைய பேரரசே!
வாழ்வு நிலையே! கண்ணம்மா!

வான மழை நீ யெனக்கு
வண்ண மயில் நானுனக்கு;
பானமடி நீ யெனக்கு
பாண்டமடி நானுனக்கு;
ஞான வொளி வீசுதடி
நங்கை நின்றன் சோதிமுகம்
ஊனமறு நல்லழகே!
ஊறு சுவையே! கண்ணம்மா!

வெண்ணிலவு நீ யெனக்கு.
மேவு கடல் நானுனக்கு;
பண்ணு சுதி நீ யெனக்கு,
பாட்டினிமை நானுனக்கு;
எண்ணி யெண்ணிப் பார்த்திடிலோர்
எண்ணமிலை நின்சுவைக்கே;
கண்ணின் மணி போன்றவளே!
கட்டியமுதே! கண்ணம்மா!

## தமிழ்த் தாய் வாழ்த்து

கண்ணு தற்பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தஇப் பசுந்தமிழ் ஏனை
மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ ?

—பரஞ்சோதியார்

தலைகொள் நஞ்சமு தாக விளையுமே
தழல்கொள் வீடு தடாகம தாகுமே
கொலைசெய் யானை குனிந்து பணியுமே
கோள் அராவின் கொடுவிடம் தீருமே
கலைகொள் வேத வனப்பதி தன்னிலே
கதவு தானும் கடுகத் திறக்குமே
அலைகொள் வாரியில் கல்லு மிதக்குமே
அப்பர் செப்பும் அருந்தமிழ்ப் பாடலே.

—தமிழ்ப் புலவர் சரித்திரம்

இயற்கையிலே கருத்தாங்கி, இனிமையிலே வடிவெடுத்து
செயற்கைகடந் தியலிசையில் செய்நடமே வாழியரோ!
பயிற்சிநிலப் பயிர்களெலாம் பசுமையுற ஒளிவழியே
உயிர்ப்பருளும் திறம்வாய்ந்த உயர்தமிழ்த்தாய் வாழியரோ!

—திரு. வி. க.

தேவினை நெஞ்சில் திகழவும் வைத்தாய்
சித்தியை ஞானியர் செப்பவும் வைத்தாய்
பாவினை நூலில் சுவைக்கவும் வைத்தாய்
பத்தியைத் தொண்டர் புகழ்க்கிடை நட்டாய்
பூவினைக் காக்கென வேத்தியல் சொற்றாய்
புத்தியைக் காக்கப் புலவரை உய்த்தாய்
யாவினைக் குங்குடி மக்களை வைத்தாய்
எத்தனை செய்தனை நற்றமி ழன்னே!

—ரா. இராகவையங்கார்

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே.

—மனோன்மணீயம்

# குறிப்பு

## புறப்பொருள்
### பக்கம் 1-2

தமிழர் வாழ்வு, அகம் என்றும், புறம் என்றும் பண்டை இலக்கியத்தில் பாகுபடுத்தப்பட்டுள்ளது. வீரம், கொடை பற்றிய செய்திகளைப் புறப் பொருள் கூறும்; காதல் பற்றிய செய்திகளை அகப் பொருள் கூறும். புறப் பொருள் பற்றிக் கூறும் பழைய எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று, புறநானூறு. பல்வேறு பொருள் பற்றிப் பல்வேறு சூழ்நிலைகளில் பல்வேறு புலவர்கள் பாடிய நானூறு பாடல்களின் தொகுப்பே புறநானூறு.

## அகப்பொருள்
### பக்கம் 3—4

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்ருகிய குறுந்தொகை, அகப் பொருள் பற்றி அமைந்த தாகும்.

## பத்துப் பாட்டு
### பக்கம் 5—6

சங்க காலத் தொகை நூல்களுள் ஒன்று, பத்துப் பாட்டு. அத் தொகுப்பில் உள்ள முதற்பாட்டு, நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படை. வீடு பேறு அடைய விரும்பும் ஒருவனை, வீடுபேறு அடைந்தா னொருவன், முருகப்பெருமானிடம் ஆற்றுப்படுத்தும் பான்மையில் அமைந்தது திருமுருகாற்றுப்படை. இந் நூல் முருகன் எழுந்தருளியிருக்கும் ஆறு படைவீடுகளையும் சிறப்பித்துப் பாடுகின்றது.

## நீதிப்பாட்டு

### பக்கம் 7—9

காவிரிப்பூம் பட்டினத்திலே தோன்றி, இளமை துறந்து, இறைவனைத் தமிழ்ப் பாட்டால் வழிபட்டு வாழ்ந்தவர் பட்டினத்தார்.

குண்டலகேசி, ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று என்பர். இந்நூல் முழுவதும் இப்போது கிடைக்கவில்லை.

பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்ருக வைத்து எண்ணப்படுவது நான்மணிக் கடிகை. இதனை விளம்பி நாகனுர் என்பார் இயற்றினுர்.

திரிகடுகம் என்ற நூலும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இதனை இயற்றியவர் நல்லாதனுர்.

வளையாபதி, ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று என்பர். இறந்துபட்ட இந் நூலை இயற்றியவர் பெயர் தெரியவில்லை.

சீவக சிந்தாமணியும், ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. திருத்தக்கதேவர் என்பார் இதனை இயற்றினுர்.

## திருக்குறள்

### பக்கம் 10—17

தெய்வப் புலமைத் திருவள்ளுவர் இயற்றிய நூல் திருக்குறளாகும். அறம், பொருள், இன்பம் என்னும் உறுதிப் பொருள் மூன்றையும் விளக்கமாக மூன்று பகுதிகளில் கூறுதலால், இந்நூல், 'முப்பால்' என்ற பெயரும் பெற்றது. ''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு,'' என்று திருவள்ளுவரையும், அவரை ஈன்ற தமிழ் நாட்டையும் புகழ்ந்து

பாடினர் பாரதியார். திருக்குறள் சில பாரத மொழி களிலும், மேலை நாட்டு மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.

## சிலப்பதிகாரம்

### பக்கம் 18—19

முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரம், இளங்கோ அடிகளால் இயற்றப்பட்டது. "அரசியல் பிழைத் தோர்க்கு அறம் கூற்ருவதும், உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதும்" இக் காப்பியத்தில் நன்கு உணர்த் தப்படுகின்றன. பண்டைத் தமிழ் நாட்டின் அரசியல், கலைவளம், பண்பாடு ஆகியவற்றைக் கற்போர் உள்ளம் கொள்ளும் வகையில் இக் காப்பியம் உணர்த்துதலால் "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" என்று சிறப் பித்துப் பாடினர் பாரதியார்.

## மணிமேகலை

### பக்கம் 20—21

சிலப்பதிகாரத்தோடு கதைத் தொடர்புடைய மணி மேகலையும் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. மதுரைக் கூலவாணிகன் சாத்தனர் என்பவர் இந் நூலை இயற்றி னர். காவிரிப்பூம் பட்டினத்துப் பெருங்குடி வணிகனை கோவலனுக்கும், ஆடல் பாடல் அழகு என்ற மூன்றிலும் சிறந்த நாடகக் கணிகையான மாதவிக்கும் மகளாகப் பிறந்து, இளமையிலேயே துறவுக்கோலம் கொண்ட மணிமேகலையைப் பற்றிக் கூறுவது இக் காப்பியம்.

# நால்வர் நற்றமிழ்

## திருஞானசம்பந்தர்

### பக்கம் 22—23

தேவாரம் பாடிய மூவருள் ஒருவர் திருஞானசம்பந்தர். இவர், சீர்காழியில் அந்தணர் குலத்தில் தோன்றித் தமிழ் நாட்டுச் சிவ தலங்களிற் சென்று இறைவனை இன்னிசைப் பாக்களால் வழிபட்டுவந்தார். அப்பாக்களே பின்னர்த் தேவாரம் என்று பெயர் பெற்றன. இவர், ஏழாம் நூற்ருண்டின் இடைப் பகுதியில் வாழ்ந்தவர். "நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தன்" என்று பாராட்டப் பெற்றவர் இவர்.

## திருநாவுக்கரசர்

### பக்கம் 24—25

மருள் நீக்கியார் என்ற பிள்ளைப்பெயருடைய இவர், இளமையில் சமண சமயத்தைச் சார்ந்து, தருமசேனர் என்றபெயரோடு விளங்கிப்பின்னர், இறைவன் அருளால் சைவ சமயத்தைச் சார்ந்தார். சிவதலங்களில் உழவாரப் படைகொண்டு தொண்டு புரிந்தும், இறைவன்மீது இனிய பாக்கள் புனைந்தும் இவர் வழிபட்டுவந்தார். இவரது தொண்டின் திறத்தால், சமணனுக இருந்த பல்லவப் பேரரசன் மகேந்திர வர்மன் சைவ சமயத்தை ஆதரிப்பானுயினுன்.

## சுந்தரமூர்த்தி

### பக்கம் 26—27

சைவ சமய குரவர்களில் ஒருவரான சுந்தரமூர்த்தி, திருமுனைப்பாடி நாட்டில், திரு நாவலூரில் பிறந்தவர். இவரது இயற் பெயர் நம்பி ஆரூரர் என்பது. சேக்கிழார்

திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம் இயற்றுவதற்கு அடிப்படையாக அமைந்த திருத் தொண்டத் தொகையை இவர் பாடினர். தொண்டை நாட்டுத் திருவெண்ணெய் நல்லூரில் சிவ பெருமானல் தடுத்தாட் கொள்ளப்பட்ட இவர், சிவ தலங்களுக்குச் சென்று இறைவனை வழிபட்டுப் பாடினர்.

## மாணிக்கவாசகர்

## பக்கம் 28—29

பாண்டி நாட்டுத் திருவாதவூரிலே தோன்றிய இவர், 'தென்னவன் பிரம்மராயன்' என்ற பட்டப் பெயருடன் பாண்டிய மன்னனின் அமைச்சராக விளங்கினர். இவர் பாடிய திருவாசகம் எளிமையும் இனிமையும் கொண்டு விளங்குதலால் "நற்கருப்பஞ் சாற்றினிலே தேன் கலந்து, பால் கலந்து, செழுங் கனித் தீஞ்சுவை கலந்து, என் ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே" என்று இராமலிங்க அடிகளார் பாராட்டினர்.

## ஆழ்வார்கள் அருந்தமிழ்

## பக்கம் 30—32

பக்திப் பிரவாகத்தில் ஆழ்ந்த திருமாலின் அடியார்கள் ஆழ்வார்கள் எனப்பட்டனர். இவ் ஆழ்வார்கள் பன்னிருவர் என்பர்.

அவர்களுள் காஞ்சியில் பிறந்தவர் பொய்கையாழ்வார். மயிலையிற் பிறந்தவர் பேயாழ்வார். மல்லையில் பிறந்தவர் பூதத்தாழ்வார். இவர்களை முதலாழ்வார்கள் என்பர்.

தொண்டரடிப் பொடியாழ்வார் சோழநாட்டிலுள்ள திருமண்டங் குடியில் பிறந்தவர். இவரது இயற்பெயர்

விப்பிர நாராயணர்; திருவரங்கம் சென்று, அரங்க நாதரைச் சேவிப்பதில் ஈடுபட்டு வாழ்ந்தவர்.

பட்டர் பிரான் என்று போற்றப்படும் பெரியாழ்வார், ஸ்ரீவில்லிபுத்தூரில் தோன்றியவர். இவர் திருமகள் ஆண்டாள் திருப்பாவை பாடியருளினர்.

கொல்லி மலைக் காவலராகவும், கூடல் நாயகராகவும், கோழிக் கோமானுகவும் விளங்கியவர் குலசேகராழ்வார். பெருமாள் திருமொழியை இவர் பாடினர்.

திருமங்கை என்னும் நாட்டில் கள்ளக்குடியிலே தோன்றினர் திருமங்கை ஆழ்வார். ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நால்வகைக் கவிகளும் பாடவல்லவர்.

தாம்ரபர்ணி என்னும் பொருனை யாற்றின் கரையில் உள்ள திருக்குருகூரில் வேளாளர் குலத்திலே தோன்றினர் திருவாய் மொழி பாடிய நம்மாழ்வார். இவர் பிறந்தருளும் பேறு பெற்றமையால் திருக்குருகூர் ஆழ்வார் திருநகரி என்று அழைக்கப் படுகின்றது.

### பரணிப் பாட்டு

### பக்கம் 33—34

ஆயிரம் யானையை அமரிடை வென்ற பெரு வீரன் மீது பரணிபாடுவது தமிழ் இலக்கிய மரபு. குலோத்துங்க மன்னன், கலிங்க நாட்டின் மீது படை எடுத்துச் சென்று வெற்றிபெற்று மீண்டதைப் புனைந்து கூறுகின்றது, கலிங்கத்துப் பரணி. இதனை இயற்றியவர், 'கவிச்சக்ரவர்த்தி' என்று சோழ மன்னனல் பாராட்டப் பெற்ற சயங்கொண்டார். "பாணிக்கோர் செயங்கொண்

டான்'' என்று கலிங்கத்துப் பரணியின் சிறப்பையும், இவரது புலமை நயத்தையும் புலவர் பாராட்டுவர்.

பள்ளியெழுச்சிப் பாட்டு
பக்கம் 35—37

அடியார்கள், ஆண்டவனைப் பாராட்டிப் பாடு முறைகள் பலவாகும். அவற்றுள் ஒன்று திருப் பள்ளி யெழுச்சிப் பாட்டு. சைவ அடியார்களும் வைணவப் பெரியார்களும் இவ் வகைப் பாடல்களைத் தத்தம் இறைவன்மீது பாடியுள்ளனர். மாணிக்க வாசகர், திருவாசகத்தில் திருப்பெருந்துறைச் சிவபெருமான்மீது பள்ளி எழுச்சி பாடியருளினர். தொண்டரடிப் பொடி ஆழ்வார் திருவரங்கப் பெருமான் மீது பள்ளி எழுச்சிப் பாட்டிசைத்தார். சென்ற நூற்றுண்டில், வடலூரில் வாழ்ந்த இராமலிங்க சுவாமிகளும், தம் திரு வருட்பாவில் பள்ளியெழுச்சி பாடினர்.

ஆற்றுப் பாட்டு
பக்கம் 38—39

இயற்கையைக் கண்டு இன்புறும் புலவர் பெரு மக்கள், ஆற்றையும், மலையையும், தென்றல் காற்றையும் தம் காவியங்களில் சிறப்பித்துப் பாடுதல் மரபு. சோழநாட்டுக் காவிரியையும்,பாண்டி நாட்டு வைகையை யும், இளங்கோ அடிகள் சிலப்பதிகாரத்தில் புகழ்ந் துள்ளார்.

மணிமேகலை ஆசிரியர் காவிரியாற்றையும், கவிஞர் கோமானகிய கம்பர், கோதாவரி ஆற்றையும் புகழ்ந்து போற்றினர்.

அம்மானைப் பாட்டு
பக்கம் 40—41

பாடிக்கொண்டு வேலை செய்வதும் விளையாடுவதும் மக்களின் பண்பாகும். பெண்களின் பணிகளிலே இதனை

மிருதியும் காணலாம். இத் தகைய பாடல்களை இளங்கோ அடிகள் சிலப்பதிகாரத்திலும், மாணிக்கவாசகர் திருவாசகத்திலும் அமைத்துள்ளனர்.

திருத்தொண்டர் புராணம்

பக்கம் 42—44

சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் இறுதியில் வைத்து எண்ணப்படுவது பெரிய புராணம் என்னும் திருத்தொண்டர் புராணம். இதனை இயற்றியவர் சேக்கிழார். இவர் பிறந்த ஊர் தொண்டைநாட்டில் உள்ள குன்றத்தூர்; அநபாயன் என்ற சிறப்புப் பெயரொடு விளங்கிய சோழ மன்னன்பால் அமைச்சராக விளங்கியவர் இவர். தமிழ் நாட்டுச் சைவ நாயன்மார் அறுபத்து மூவரின் வரலாற்றினைச் சுவைபடப் பாடியுள்ளார். 'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ' என்று சேக்கிழாரைப் புகழ்ந்து போற்றினர் மாபெரும் புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

கம்பராமாயணம்

பக்கம் 45—54

புவியினுக்கு அணியாய்த் திகழும் பெருங் கவிஞராகிய கம்பர் சோழநாட்டுத் திருவழுந்தூரில் பிறந்தவர். திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டவர். வடமொழியில் வான்மீகர் இயற்றிய இராமாயணத்தைத் தழுவி இவர் தமிழில் இராமாயணம் இயற்றினர். உவமையிலாக் கவித்திறமும். உணர்வரிய கலைவளமும் பெற்ற இக் கவிஞரைக் 'கல்வியிற் பெரிய வன் கம்பன்' என்று தமிழகம் போற்றுகின்றது.

## நளவெண்பா

### பக்கம் 55—56

பழங்காலமுதல் தமிழகத்தில் நிலவிவரும் நளன் வரலாற்றை வெண்பாவிற் பாடினுர் புகழேந்தி என்னும் புலவர். இவர், தொண்டை நாட்டைச் சேர்ந்தவர் என்பர். "கேட்டாலும் இன்பம் கிடைக்கும் கண்டீர் கொண்ட கீர்த்தியொடு பாட்டாலுயர்ந்த புகழேந்தி" என்று இப் புலவரைப் படிக்காசுப் புலவர் பாராட்டுகின்ருர்.

## வில்லி பாரதம்

### பக்கம் 57—58

வட மொழியில் வியாசர் இயற்றிய பாரதத்தின் வழி நூலாக, வில்லிபுத்தூரார், தமிழ் மொழியில் இயற்றிய நூல் வில்லி பாரதம் என வழங்கும். திருமுனைப்பாடி நாட்டில், சனியூரிலே, அந்தணர் குலத்தில் தோன்றிய இக் கவிஞரை வக்கபாகையில் ஆட்சிபுரிந்த வரபதி யாட்கொண்டான் ஆதரித்தான்.

## அரிச்சந்திர புராணம்

### பக்கம் 59—62

பதினுரும் நூற்ருண்டில் வாழ்ந்த வீரை ஆசு கவிராயரால் இயற்றப்பட்டது இந்நூல்.

## பிள்ளைத் தமிழ்

### பக்கம் 63—65

பதினேழாம் நூற்ருண்டில், தமிழ்மொழி தழைக்க அருந்தொண்டாற்றியவர் குமரகுருபரர். இவர், திருநெல் வேலியைச் சார்ந்த ஸ்ரீவைகுண்டத்தில் தோன்றியவர்.

இவர் இயற்றிய மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், சொல் நயமும் பொருள் நயமும் பொருந்தித் திகழ்வது.

திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் இயற்றியவர் பகழிக் கூத்தர். இவர், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சன்னாசி கிராமத்தில் திருமாலடியார் குடியில் பிறந்தவர்.

நம்மாழ்வார் பிள்ளைத் தமிழ் ஆழ்வார் திருநகரி, பெரியன்: வே. நா. சீனிவாசையங்கார் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

திருசிரபுரம், மகாவித்வான்: மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களால் இயற்றப்பட்டது சேக்கிழார் பிள்ளைத்தமிழ்.

## தாயுமானவர் பாடல்

பக்கம் 66—67

பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய தாயுமானவர் வட மொழியும், தென்மொழியும் நன்கு கற்றவர். சைவ சமயக் கருத்துக்களையும் தத்துவங்களையும் அமைத்து அழகிய தமிழ்ப் பாட்டிசைத்துள்ளார்.

## திரு அருட்பா

பக்கம் 68—70

சிதம்பரத்திற்கு அருகே உள்ள மருதூரில் பிறந்த இராமலிங்க அடிகள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் பாவலர்களுள் தலைசிறந்தவர். இவரது அருட்பா இனிய, எளிய செந்தமிழ் நடையில் அமைந்துள்ளது.

### குறத்திப் பாட்டு

பக்கம் 71—74

மீனாட்சியம்மை குறம், குமரகுருபர அடிகளால் பாடப்பெற்றது என்பர்; பொதியமலையின் சிறப்பினைப் புனைந்துரைப்பது இந் நூல்.

தென்காசியை அடுத்துள்ள மேலகரம் என்ற சிற்றூரில் தோன்றிய திரிகூடராசப்பக் கவிராயர் குற்றாலக் குறவஞ்சி பாடினார்.

கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் என்பார் சரபேந்திர பூபால குறவஞ்சி இயற்றினார்.

### தெய்வத் தமிழ் மாலை

பக்கம் 75—77

பதினைந்தாம் நூற்றாண்டில் திருவண்ணாமலையில் வாழ்ந்த அருணகிரிநாதர், கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, திருப்புகழ் என்னும் நறுந்தமிழ்ப் பாமாலை அணிந்து முருகப் பெருமானைப் போற்றினார்.

தேம்பாவணி என்னும் காவியம், இத்தாலிய தேசத்தில் பிறந்து தமிழ் நாட்டிற்போந்து இயேசு மத சேவை செய்த பெஸ்கி என்னும் வீரமாமுனிவரால் இயற்றப் பட்டது. இயேசுநாதரைக் கைத்தாதையாக வளர்த்த சூசையப்பரின் சரிதத்தைக் கூறுவது இக் காவியம்.

முகமது நபி நாயகத்தின் பெருமையை விரித்துரைக்கும் நூல் சீறாப் புராணம். இதனை இயற்றிய கவிஞர் உமறுப் புலவர். பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

திருநெல்வேலியைச் சேர்ந்த பாளையங்கோட்டையில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த H. A. கிருஷ்ண பிள்ளை என்னும் கிருத்துவக் கவிஞர்

ஆங்கிலத்திலுள்ள " Pilgrim's Progress " என்ற நூலைத் தழுவி இரட்சணிய யாத்திரிகம் என்னும் காவியத்தை இயற்றியுள்ளார்.

தமிழகப் புகழ் மாலை

பக்கம் 78—80

தொண்டை நாட்டு வருணனை சேக்கிழார் புராணத்தில் உள்ளது.

பூம்புகார் வருணனை சிலப்பதிகாரத்திலும் பெரிய புராணத்திலும் உள்ளது.

புரவலர் புகழ் மாலை

பக்கம் 81—83

இப்பகுதியில் உள்ள தனிப்பாடல்கள் பல புலவர்களால் பல சூழ்நிலைகளிற் பாடப்பட்டன.

பாரதி பாடல்

பக்கம் 84—102

இருபதாம் நூற்றாண்டில் இணையற்ற கவிஞராய்த் திகழ்ந்த சுப்பிரமணிய பாரதியாரின் பெருமையைத் தமிழ் நாடு நன்கு அறியும்.

தமிழ்த்தாய் வாழ்த்து

பக்கம் 103—104

பரஞ்சோதியார், திருவிளையாடற்புராணம் இயற்றிய கவிஞர்.

ஆங்கிலப் புலமையும் தமிழ்ப் புலமையும் பெற்ற பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றிய நாடகம் மனோன்மணீயம்.

ERSITY EXTENSION L